# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2437/24 - 2025 මැයි මස 21 වැනි බදාදා - 2025.05.21

*2437/24 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டம்**

*1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆவது பிரிவுடன் வாசிக்க வேண்டிய 41 ஆவது பிரிவின் கீழ் விளையாட்டுத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளைகள் தொடர்.*

தேசிய ஒற்றுமையை வளர்த்தல், உடல் மற்றும் உல நலனை மேம்படுத்தல் மற்றும் சர்வதேச ரீதியில் இலங்கையின் புகழை மேலோங்கச் செய்தல் என்பவற்றுக்காக விளையாட்டின் முக்கியத்துவத்தை இனங்கண்டு, விளையாட்டின் கட்டுப்பாடு மற்றும் நிருவாகம் என்பவற்றினுள் தொடர்ச்சியாக, வெளிப்படையான தன்மை, சமத்துவம் மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பாக உயர் தரங்களைப் பாதுகாக்க வேண்டிய காலத்தின் தேவையினை உணர்ந்து, விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகள், அதிகாரிகள், நிருவாகிகள் மற்றும் ஏனைய உதவியாளர்கள் உள்ளிட்ட விளையாட்டின் அனைத்து பங்குதாரர்களையும் ஊழல், பாகுபாடு காட்டுதல் மற்றும் முறைகேடுகளிலிருந்து விடுபட்டிருப்பதை உறுதி செய்வதற்காக புதிய அரசாங்கத்தின் அர்ப்பணிப்பினை உறுதிப்படுத்தி, திறமை, நேர்மை, மற்றும் ஒழுக்கமிக்க புதிய விளையாட்டுக்கள் கலாச்சாரம் ஒன்றினை உருவாக்கும் பொது மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதனை நோக்காகக் கொண்டு, இந்த புதிய ஒழுங்கு விதிகளை விதிப்பது விளையாட்டுக்கள் நிருவாகம் தொடர்பாக புதிய தேசியக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்காக அமைவதுடன், விளையாட்டுக்களின் அனைத்து பங்குதாரர்களுக்கும்


1A - PG 7179 — 347 (2025/05)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

பக்கச்சார்பின்றி அனைவருக்கும் சமமான வாய்ப்பினை பெற்றுக்கொள்ளக் கூடிய, விளையாட்டுக்கள் நிருவாகத்தை வெளிப்படையான தன்மையுடன், பொறுப்புடனும் பொறுப்புக் கூறலுடனும் இயங்கி வருவதை உறுதிப்படுத்துவதற்காகும்.

**சுனில் குமார கமகே (பா.உ.),**
இளைஞர் அலுவல்கள் மற்றும்
விளையாட்டுத்துறை அமைச்சர்.

கொழும்பு,
2025, மே 21.

**கட்டளைகள்**

1. 2025ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டுச் சங்கக் கட்டளைகள் என இக்கட்டளைகள் அழைக்கப்படும்.

**பகுதி I**

**தேசிய அரச பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டத்தின் (காலத்திற்குக் காலம் திருத்தம் செய்யப்பட்ட) 29 ஆவது பிரிவின் கீழ் தேசிய விளையாட்டுச் சங்கங்களை பதிவு செய்தல்**

2. (I) இதன் II ஆவது அட்டவணையில் விபரித்துள்ள யாதேனுமொரு விளையாட்டு தொடர்பாக தேசிய விளையாட்டுச் சங்கம் ஒன்றினை பதிவு செய்வதற்கான சகல விண்ணப்பப் படிவங்களும்:-

[i] விளையாட்டுத்துறை விடயம் ஒப்படைக்கப்பட்டுள்ள அமைச்சரின் அனுமதிக்காக விளையாட்டுப் பணிப்பாளர் நாயகத்தினால் சமர்ப்பித்தல் வேண்டும்.

[ii] இங்கு I ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 'அ' மாதிரிக்கு பெருமளவாக அமைதல் வேண்டும்.

[iii] அந்த தேசிய விளையாட்டுச் சங்கத்தின் / சம்மேளனத்தின் தலைவர் மற்றும் செயலாளரினால் தெளிவாக உத்தியோகபூர்வ இலச்சினை பொறிக்கப்பட்டு கைச்சாத்திடப்படல் வேண்டும் : மற்றும்

[iv] குறித்த விண்ணப்பப் படிவத்துடன் பின்வரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(அ) இதன் II ஆவது பகுதியில் நிச்சயமாகக் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை உள்ளடக்கிய தேசிய விளையாட்டுச் சங்கத்தின் / சம்மேளனத்தின் யாப்பின் பிரதியொன்று ;

(ஆ) அந்தத் தேசிய விளையாட்டுச் சங்கத்தின் / சம்மேளனத்தின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி உள்ளிட்ட தொடர்பாடலுக்கான தகவல்கள் ;

(இ) அந்தத் தேசிய விளையாட்டுச் சங்கத்தின் / சம்மேளனத்தின் நடப்பு நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி உள்ளிட்ட தொடர்பாடலுக்கான தனிப்பட்டத் தகவல்கள் ;

(ஈ) I ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ''உ'' மாதிரிக்கேற்ப தயாரிக்கப்பட்ட முறையான கையொப்ப ஆவணமொன்றை உள்ளடக்கிய மேலே குறிப்பிட்ட நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களை நியமித்துக்கொண்ட ஆண்டு பொதுக் கூட்ட அறிக்கையின் தலைவர் மற்றும் செயலாளரினால் தமது கையொப்பம் மற்றும் பதவி இலச்சினை என்பவற்றினை பொறித்து உறுதிப்படுத்திய பிரதியொன்று ;

(உ) அந்தத் தேசிய விளையாட்டுச் சங்கத்தின் / சம்மேளனத்தின் கடந்த நிதியாண்டிற்குரிய கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களின் அந்தத் தேசிய விளையாட்டுச் சங்கத்தின் / சம்மேளனத்தின் கடந்த நிதியாண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களின் அந்த தேசிய விளையாட்டுச் சங்கத்தின் / சம்மேளனத்தின் தலைவர் மற்றும் செயலாளரினால் தமது கையொப்பம் மற்றும் பதவி இலச்சினை இட்டு

உறுதிப்படுத்திய பிரதியொன்று ; (இப்பணிக்குரிய நிதியாண்டு சனவரி 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடையும் ஒரு வருட காலத்தினைக் கவனத்திற்கொள்ளல் வேண்டும்.)

(ஊ) அந்த சங்கத்துடன் இணைந்த நிறுவனங்கள், விளையாட்டுச் சங்கங்களின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரிகள் உள்ளிட்ட பிற தொடர்பாடலுடன் தொடர்புடைய தகவல்கள் உட்பட அந்த இணைந்த நிறுவனங்கள், விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் பிற அமைப்புகளின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரி உள்ளிட்ட தொடர்பாடலுடன் தொடர்புடைய தகவல்கள் ;

(எ) அந்த தேசிய விளையாட்டுச் சங்கத்தினை / சம்மேளனத்தினை பதிவு செய்வதற்காக சமர்ப்பிக்கும் போது குறித்த தேசிய சங்கமானது ஆகக் குறைந்தது 03 நிருவாக மாவட்டங்களில் இயங்கி வருவதாக குறித்த மாவட்ட விளையாட்டு அலுவலர்களின் உறுதிப்படுத்தல் ஒன்றுடன் அந்த தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/ சம்மேளனத்தின் தலைவர் மற்றும் செயலாளரினால் சமர்ப்பிக்கப்படுகின்ற முறையான அறிக்கையொன்று.

(2) உரியவாறு பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவத்தினை விளையாட்டுப் பணிப்பாளர் நாயகத்திடம் ஒப்படைத்தல் வேண்டும். விளையாட்டுப் பணிப்பாளர் நாயகத்தினால் குறித்த விண்ணப்பப் படிவம் கிடைத்ததாக உறுதிப்படுத்தலொன்று விண்ணப்பதாரர் / விண்ணப்பதாரர்களுக்கு வழங்குதல் வேண்டும். மேலும், விளையாட்டுப் பணிப்பாளர் நாயகத்தினால், விண்ணப்பமொன்று கிடைக்கப் பெற்று (60) நாட்களுக்குள் அந்த விண்ணப்பப் படிவம் தொடர்பான தீர்மானத்தை விண்ணப்பதாரருக்கு / விண்ணப்பதாரர்களுக்கு அறிவித்தல் வேண்டும்.

(3) எந்தவொரு தேசிய விளையாட்டுச் சங்கத்தினையும் / சம்மேளனத்தினையும் பதிவு செய்வதற்கு முன்னர் விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்திற்கு அந்த விளையாட்டுடன் தொடர்புடைய மேலதிகத் தகவல்களை வேண்டி நிற்கலாம்.

(4) விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்தினால் குறித்த விண்ணப்பத்தினை விளையாட்டுக்கள் சட்டம் மற்றும் இந்த ஒழுங்கு விதிகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளனவா என்பதனை பரீட்சித்ததன் பின்னர் அந்த விண்ணப்பம் தொடர்பாக திருப்தியடையும் பட்சத்தில், அந்த சங்கத்தின் / சம்மேளனத்தின் பதிவு அமைச்சின் செயலாளரின் பரிந்துரைக்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். குறித்த விண்ணப்பம் அமைச்சின் செயலாளரினால் சிபாரிசு செய்யப்பட்டதன் பின்னர் அமைச்சரின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(5) குறித்த விண்ணப்பத்திற்கு அமைச்சரின் அனுமதி கிடைக்கப் பெற்றதன் பின்னர், பதிவுக் கட்டணமாக தேசிய விளையாட்டுக்கள் நிதியத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டிய மீளச் செலுத்தப்படாத முப்பதாயிரம் ரூபா (ரூ.30,000.00) பெறுமதியான தொகையினைச் செலுத்துமாறு விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்தினால் குறித்த விண்ணப்பதாரருக்கு / விண்ணப்பதாரர்களுக்கு அறிவித்தல் வேண்டும்.

(6) பதிவுக் கட்டணத்தைச் செலுத்தியதன் பின்னர் விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்தினால் அந்தத் தேசிய விளையாட்டுச் சங்கத்தை / சம்மேளனத்தை ஆகக் கூடியது 02 வருடங்கள் நன்னடத்தைக் காலத்திற்கு உட்படும் வகையில் பதிவு செய்தல் வேண்டும். மேலும் இதன் I ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள "ஆ" மாதிரிப் படிவத்திற்கேற்ப பதிவுச் சான்றிகழ் ஒன்று அந்த விளையாட்டுச் சங்கத்திற்கு வழங்குதல் வேண்டும்.

(7) நன்னடத்தைக் காலத்தின் இறுதியில் மற்றும்/அல்லது அக்காலத்திற்குள் அந்த விளையாட்டுச் சங்கம் / சம்மேளனம் ஆகக் குறைந்தது 07 நிருவாக மாவட்டங்களில் விஸ்தரிக்கப்பட்டு இயங்கி வருவதாக குறித்த மாவட்ட விளையாட்டு அலுவலர்களின் உறுதிப்படுத்தல் ஒன்றுடன் அந்தத் தேசிய விளையாட்டுச் சங்கத்தின் / சம்மேளனத்தின் தலைவரினால் மற்றும் செயலாளரினால் முறையான அறிக்கை ஒன்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.

(8) நன்னடத்தைக் காலத்தின் இறுதியில் மற்றும்/அல்லது அக்காலத்திற்குள் பதிவு இரத்துச் செய்யப்படாத பட்சத்தில் அல்லது இடைநிறுத்தப்படாத பட்சத்தில், அந்தச் சான்றிதழில் குறிப்பிட்டுள்ள தேசிய விளையாட்டுச் சங்கம் / சம்மேளனம் நிரந்தரமாக பதிவு செய்யப்பட்டதாக அனைத்துக் குறிக்கோள்களுக்குமான முக்கிய சான்றாக அமைதல் வேண்டும்.

(9) விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்தினால், விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தில் பதிவு செய்துள்ள தேசிய விளையாட்டுச் சங்கங்கள் பற்றிய ஆவணமொன்றினைப் பேணிவருதல் வேண்டும். அந்த ஆவணம் இங்கு I ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள "இ" மாதிரிப் படிவத்திற்கேற்ப அமைதல் வேண்டும்.

## பகுதி II

### தேசிய விளையாட்டுச் சங்கத்தின் / சம்மேளனத்தின் யாப்பு

*3.* *(1)* வேறு யாதேனுமொரு சட்டத்தில் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அனைத்து தேசிய விளையாட்டுச் சங்கத்திற்கும் / சம்மேளனத்திற்கும் இங்கு இதனகத்துப் பின்னர் உறுதியாகக் குறிப்பிட்டுள்ள விபரங்களை உள்ளடக்கிய யாப்பு ஒன்று இருத்தல் வேண்டும். அது விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

அவ்வாறாயினும், இந்த கட்டளைகள் அமுலுக்கு வருதல் ஆரம்பமாகும் தினமாகும் போது யாதேனுமொரு குறித்த விளையாட்டிற்காகப் பதிவு செய்துள்ள யாதேனுமொரு தேசிய விளையாட்டுச் சங்கம் / சம்மேளனம் இங்கு இதனகத்துப் பின்னர் குறித்துக் கூறியுள்ள விபரங்கள் அடங்கிய திருத்தச் சட்டம், இந்தக் கட்டளைகள் நடைமுறைக்குவரும் தினத்திலிருந்து 90 நாட்களுக்குள் விளையாட்டுப் பணிப்பாளர் நாயகத்திடம் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும.

(2) குறித்த யாப்பிற்கு பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி கிடைக்கப் பெற்றதன் பின்னர் ஆயினும் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து யாப்புத் திருத்தங்களும் உரியவாறு பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்படல் வேண்டும். அனைத்து தேசிய சங்கங்களும் தமது உத்தியோகபூர்வ யாப்பாக விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்ற யாப்பினையே ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

(3) சகல தேசிய விளையாட்டுச் சங்கங்களும் / சம்மேளனங்களும் தமது இணைந்த சர்வதேச சங்கத்தின்/ சம்மேளனத்தின் விதிகள், நியதிச் சட்டங்கள், நடவடிக்கை முறைகள், ஒழுங்கு விதிகள் அல்லது கட்டளைகள் என்பவற்றின் பிரகாரம் தமது யாப்பினைத் தயாரித்தல் அல்லது திருத்தம் செய்தல் என்பன மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன், அதன் அனைத்து விதமான திருத்தங்களையும் விசேட பொதுக் கூட்டமொன்றின் போது, நிறைவேற்றுவதற்காக சமர்ப்பித்தல் வேண்டும். குறித்த அனைத்துத் திருத்தங்களும் அரசியலமைப்பிற்கு, காலத்திற்குக் காலம் திருத்தம் செய்யப்பட்ட விளையாட்டுக்கள் சட்டத்திற்கு மற்றும் அதன் கீழ் வெளியிடப்பட்ட அனைத்து விதமான ஒழுங்கு விதிகளுக்கும் இணங்கும் வகையில் அமைதல் வேண்டும்.

*4.* *(1)* அனைத்து தேசிய விளையாட்டுச் சங்கமும் / சம்மேளனமும், பின்வரும் அலுவலர்கள் அடங்லாக ஆகக் கூடியது 17 பேருக்கு வரையறுக்கப்பட்ட நிறைவேற்றுக் குழுவொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும். நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கையானது எப்போதும் ஒற்றை இலக்கத்தில் அமைதல் வேண்டும்.

(i) தலைவர் மற்றும் உப தலைவர்கள்

(அ) உப தலைவர்களின் எண்ணிக்கை ஆகக் கூடியது 03 ஆக வரையறுக்கப்படல் வேண்டும்.

(ஆ) ஒரு உப தலைவரை பதவி வழியாக குறித்த விளையாட்டின் இலங்கை பாடசாலை விளையாட்டுச் சங்கத்திற்கு/ சம்மேளனத்திற்கு பெற்றுக்கொடுத்தல் வேண்டும். பின்வரும் 4.(2) இன் கீழ் பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள் குறித்த உப தலைவர் தொடர்பில் மாத்திரம் விதிவிலக்காக அமையும்.

(ii) செயலாளர் மற்றும் உப செயலாளர்

(iii) பொருளாளர் மற்றும் உப பொருளாளர்

(iv) நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள்

(அ) குறித்த விளையாட்டு பெண்கள் விளையாடும் ஒரு விளையாட்டாயின் ஆகக் குறைந்தது இரண்டு நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் இருவராவது கட்டாயமாக பெண்களாக இருத்தல் வேண்டும்.

(2) கீழுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்த நபர் ஒருவர் மாத்திரம் மேற்படி (I) இன் (i), (ii) மற்றும் (iv) ஆகிய பதவிகளுக்கு தேர்ந்தெடுப்பதற்காக தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

(i) விளையாட்டுத்துறை அமைச்சின் அனுமதியுடன் இலங்கையினைப் பிரதிநிதித்துவப்படுத்தி சர்வதேச போட்டிகளில் பங்கேற்றிருத்தல் மற்றும்/அல்லது

(ii) குறித்த தேசிய சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய சிரேஷ்ட மற்றும்/அல்லது கனிஷ்ட போட்டி ஒன்றிலே அல்லது தேசிய மகா விளையாட்டுப் போட்டி ஒன்றின் போது, தனி நிகழ்ச்சி ஒன்றிலே 1 ஆவது, 2 ஆவது அல்லது 3 ஆவது இடத்தினைப் பெற்றிருத்தல் மற்றும்/அல்லது குழுப் போட்டிகளில் முதலாம் இடம் மற்றும்/அல்லது இரண்டாம் இடம் பெற்ற குழுவின் உறுப்பினர் ஒருவராக இருத்தல் மற்றும்/அல்லது

(iii) குறித்த விளையாட்டின் பாதுகாப்புச் சேவை விளையாட்டுக்கள் / அரச சேவை விளையாட்டுக்கள்/ இலங்கைப் பல்கலைக்கழக விளையாட்டுக்கள் / தேசிய மகா விளையாட்டுப் போட்டியில் மாகாண மற்றும் மாவட்டப் போட்டிகள் / தேசிய பாடசாலை அல்லது அகில இலங்கை பாடசாலை விளையாட்டுப் போட்டிகள் / தேசிய பாடசாலை அல்லது அகில இலங்கை பாடசாலை விளையாட்டுப் போட்டிகளின் மாகாண மற்றும் மாவட்ட போட்டிகள் / பிரசித்திபெற்ற பாடசாலைப் போட்டிகள், தேசிய இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் /மஹாவலி விளையாட்டுப் போட்டிகள் அல்லது இவற்றிற்கு மேலதிகமாக யாதேனும் தேசிய விளையாட்டுச் சங்கத்தினால் அனுமதித்த பிற தேசிய மட்டத்திலான விளையாட்டுப் போட்டி ஒன்றிலே அல்லது ......... தனிப் போட்டிகளில் 1 ஆவது, 2 ஆவது மற்றும் 3 ஆவது இடத்தினைப் பெற்றிருத்தல் மற்றும்/அல்லது குழுப் போட்டிகளில் முதலாம் இடம் மற்றும்/அல்லது முதலாவது ......... மற்றும்/அல்லது இரண்டாம் ...... குழுவின் உறுப்பினர் ஒருவராக இருத்தல்.

(iv) 15 வருடங்களுக்கு மேற்பட்ட தொழில்சார் அனுபவத்துடன் கூடிய பட்டயக் கணக்காளர் ஒருவராக இருத்தல் மற்றும்/அல்லது 15 வருடங்களுக்கு மேற்பட்ட தொழில்சார் அனுபவத்துடன் கூடிய சட்டத்தரணி ஒருவராக இருத்தல் மற்றும்/அல்லது இலங்கை மருத்துவ சபையின் முழுமையான அங்கத்துவத்துடன் கூடிய 15 வருடங்களுக்கு மேற்பட்ட தொழில்சார் அனுபவத்துடன் கூடிய மருத்துவர் ஒருவராக இருத்தல் மற்றும்/அல்லது 15 வருடங்களுக்கு மேற்பட்ட தொழில்சார் அனுபவத்துடன் கூடிய பட்டயப் பொறியியலாளர் ஒருவராக இருத்தல் மற்றும்/அல்லது இந்நாட்டின் தேசிய பல்கலைக்கழகம் ஒன்றிலே விளையாட்டு / விளையாட்டு விஞ்ஞானம் தொடர்பான முதல் பட்டத்துடன் 15 வருடங்களுக்கு மேற்பட்ட தொழில்சார் அனுபவத்துடன் கூடிய நபர் ஒருவராக இருத்தல்.

*(3)* பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள நபர் ஒருவர் மேற்படி (I) இன் (iii) இன் பதவிகளுக்கு தேர்ந்தெடுப்பதற்கான தகைமையுடையவராக இருத்தல் வேண்டும்.

[i] பட்டயக் கணக்காளர் ஒருவராக இருத்தல் மற்றும்/அல்லது

[ii] முகாமைத்துவ கணக்காளர்களின் பட்டய நிறுவகத்தின் அங்கத்தவர் ஒருவராக இருத்தல் மற்றும்/அல்லது

[iii] சான்றிதழ் பெற்ற பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அங்கத்தவர் ஒருவராக இருத்தல் மற்றும்/அல்லது

[iv] இந்நாட்டின் அங்கீகரிக்கப்பட்ட அரச பல்கலைக்கழகம் ஒன்றிலே முகாமைத்துவம் அல்லது வணிகவியல் பற்றிய முதலாவது பட்டத்தைப் பூர்த்தி செய்த ஒருவராக இருத்தல்.

*(4)* யாதேனுமொரு தேசிய விளையாட்டுச் சங்கம் / சம்மேளனம் தொடர்பில் மேலே குறிப்பிட்ட (3) இன் கீழ் தகைமை பெற்ற போதிய அபேட்சகர்கள் பலர் வேட்பு மனு தாக்கல் செய்தில்லாத சந்தர்ப்பத்தில் மாத்திரம், பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அபேட்சகர்களும், தேர்ந்தெடுப்பதற்கு தகைமை பெறுவர்.

(i) இலங்கை வங்கியாளர்களின் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட வங்கியியல் மற்றும் நிதி பற்றிய சான்றிதழ் ஒன்றினைப் பெற்றுள்ள நபர் ஒருவராக இருத்தல் அல்லது இலங்கை கணக்கியல்

….. நிறுவகத்தின் அங்கத்தவர் ஒருவராக இருத்தல் அல்லது வங்கியியல், நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்கியல் துறையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு சான்றிதழ் உடன் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அனுமதிப்பத்திரதார வணிக வங்கி ஒன்றின் அல்லது அனுமதிப்பத்திரதார விசேட வங்கி ஒன்றின் அல்லது 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில்முயற்சிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதிப்பத்திரதார நிதிக் கம்பனி ஒன்றிலே அல்லது 2000 ஆண்டின் 56 ஆம் இலக்க குத்தகை நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பதிவு செய்த குத்தகை நிதி நிறுவனம் ஒன்றிலே கணக்கீட்டுத் துறையில் பணியாளர் ஒருவராக மூன்று வருட அனுபவமுள்ள நபர் ஒருவராக இருத்தல்.

(ii) அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள், அரச கம்பனிகள் மற்றும் பிற அரச நிறுவனம் ஒன்றிலே கணக்கியல் துறையில் பணியாளர் ஒருவராக ஆகக் குறைந்தது மூன்று வருட அனுபவமுள்ள நபர் ஒருவராக இருத்தல்.

(iii) முகாமைத்துவ கணக்காளர்களின் பட்டய நிறுவகத்தின் அல்லது சான்றிதழ் பெற்ற பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட அவ்வப்போதைய மட்டத்தில் சான்றிதழ் ஒன்றுள்ள நபர் ஒருவராக இருத்தல்.

(5) இந்தப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகைமையினதும் உண்மைத்தன்மை தகைமைகளுடன் தொடர்புடைய முறையான தொழில் சான்றிதழ்கள், விளையாட்டுச் சான்றிதழ்கள், தொழில்சார் தகைமை பற்றிய சேவைச் சான்றிதழ்கள் மூலம் மாத்திரம் உறுதிப்படுத்தல் வேண்டும். வேறு விதமான பரிந்துரைகள் மற்றும்/அல்லது நற்சான்றிதழ்கள் போன்ற ஆவணங்களை வைத்து தகைமையினைத் தீர்மானித்தலாகாது.

(5) (1) தேசிய விளையாட்டுச் சங்கம் / சம்மேளனம் ஒன்றின் நிறைவேற்றுக் குழுவின் அனைத்து அலுவலர்களும் 02 வருடங்களுக்கு ஒருமுறை வருடாந்த பொதுக் கூட்டம் ஒன்றின் போது நடாத்தப்படுகின்ற தெரிவின்போது தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும்.

(2) (i) அங்கத்தவர் தெரிவிற்கு முன்னர் 08 வருடங்கள் அல்லது 08 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் தொடர்ச்சியாக அல்லது இடைவெளியுடன் யாதேனுமொரு தேசிய சங்கத்தின் / சம்மேளனத்தின் தலைவர் மற்றும்/அல்லது செயலாளர் மற்றும்/அல்லது பொருளாளர் பதவி வகித்துள்ள எவரும் மீண்டும் எந்தவொரு சங்கத்தின் / சம்மேளனத்தின், தலைவர் மற்றும்/அல்லது செயலாளர் மற்றும்/அல்லது பொருளாளர் ஆகிய பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகைமை பெறமாட்டார். எனினும் நிறைவேற்றுக் குழு உறுப்புரிமையினைப் பெறுவதற்கு அதில் தடையொன்றும் காணப்படமாட்டாது.

(ii) மேலே குறிப்பிட்ட (i) இன் வரையறைகளின் கீழ் ஏதேனுமொரு தேசிய சங்கத்தின் / சம்மேளனத்தின் தலைவர் மற்றும்/அல்லது செயலாளர் மற்றும்/அல்லது பொருளாளர் பதவி வகிக்கும் காலம் உட்பட நிறைவேற்றுக் குழு அங்கத்துவம் வகிக்கக்கூடிய காலப் பகுதி தொடர்ச்சியாக அல்லது இடைவிட்டு 12 வருடங்களாகும்.

(iii) யாதேனுமொரு தேசிய சங்கத்தின் / சம்மேளனத்தின் மேற்குறிப்பிட்ட 12 வருட ஆகக் கூடிய பதவிக் காலம் மேற்படி (2) (i) மற்றும் (ii) வரையறைகளுக்கு உட்பட்டதாக பூர்த்திசெய்த யாதேனுமொரு நபர் குறித்த தேசிய சங்கத்தின் / சம்மேளனத்தின் அல்லது வேறு தேசிய சங்கமொன்றின்/ சம்மேளனம் ஒன்றின் நிறைவேற்றுக் குழுவொன்றிற்கு தெரிவு செய்யப்படுவதற்கு தகுதியற்றவராகின்றார்.

(iv) மேலே குறிப்பிட்ட (i), (ii), (iii) சந்தர்ப்பங்களுடன் தொடர்புடையதாக 12 ஆகக் கூடிய பதவிக் காலத்தைக் கணிப்பிடும் போது யாதேனுமொரு தேசிய சங்கத்தில் / சம்மேளனத்தில் இடைக்கால நிருவாகக் குழுவொன்றிலே பதவி வகித்த காலப் பகுதிகளும் தொடர்புடையதாகும்.

(3) யாதேனுமொரு தேசிய சங்கத்தின் / சம்மேளனத்தின் தலைவர், செயலாளர் அல்லது பொருளாளர் ஆகிய பதவிகளின் உத்தியோகபூர்வ காலப் பகுதி முடிவடைவதற்கு முன்னர் ஏற்படுகின்ற ஒரு வெற்றிடமானது

விசேட பொதுக் கூட்டத்திலே நிரப்பப்படுதல் வேண்டும். வருடாந்த பொதுக் கூட்டத்தில் அனுமதி பெற்றுக்கொள்வதற்கு உட்படும் வகையில் ஏனைய வெற்றிடங்கள் நிறைவேற்றுக் குழுக் கூட்டமொன்றிலே நிரப்பப்படுதல் வேண்டும்.

6. யாதேனுமொரு நபர் தேசிய விளையாட்டுச் சங்கம் ஒன்றின் / சம்மேளனம் ஒன்றின் பதவி ஒன்றிற்காக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது பதவி ஒன்றினை வகிப்பதற்கு அல்லது பெயரளவு உறுப்பினர் ஒருவராக இருப்பதற்கு யாதேனுமொரு தேசிய விளையாட்டுச் சங்கம் ஒன்றின் / சம்மேளனம் ஒன்றின் குழுவின் உறுப்பினராவதற்கு அல்லது தேசிய விளையாட்டுச் சங்கம் ஒன்றின் / சம்மேளனம் ஒன்றின் இணைந்த சங்கம் ஒன்றின் அல்லது சம்மேளனம் ஒன்றின் பதவி ஒன்றிற்கு தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது பதவி ஒன்றினை வகிப்பதற்கு அல்லது பெயரளவு அங்கத்தவராக இருப்பதற்கு அவர் பின்வருமாறு தகுயற்றவராக அமைதல் வேண்டும்.

(1) உரிய அதிகாரம் பெற்ற நீதிமன்றம் ஒன்றினால் சித்த சுவாதீனமற்ற நபர் ஒருவர் அல்லது அவ்வாறான நபர் ஒருவராக நிர்ணயித்துள்ள பட்சத்தில் ;

(2) உரிய அதிகாரம் பெற்ற நீதிமன்றம் ஒன்றினால் வங்குரோத்து நபர் ஒருவர் அல்லது அவ்வாறான வங்குரோத்து நபர் ஒருவராக நிர்ணயித்துள்ள பட்சத்தில் ;

(3) நிதி தூய்மைப்படுத்தல், இலஞ்சம் அல்லது ஊழல் மற்றும் அதை அண்டிய குற்றவியல் குற்றமொன்று அல்லது மற்றும்/அல்லது குற்றவியல் நடவடிக்கைமுறைக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றமொன்று தொடர்பாக நீதிமன்றம் ஒன்றினால் அல்லது வேறு யாதேனுமொரு நியாய சபையினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ள மற்றும் ஆறு மாதங்களுக்குக் குறையாத காலப் பகுதிக்கு சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருப்பின் ;

(4) திருத்தம் செய்யப்பட்ட விளையாட்டுச் சட்டத்தின் கீழ் அல்லது திருத்தம் செய்யப்பட்ட விளையாட்டுக்களுடன் தொடர்புடைய குற்றங்களைத் தடுக்கும் சட்டத்தின் கீழ் யாதேனுமொரு குற்றத்திற்கு குற்றவாளியாகி இருப்பின் ;

(5) முறையற்ற நிதி குற்றமொன்றிற்கு, முறையற்ற செயல் ஒன்றிற்கு, ஊழல் ஒன்றிற்கு, ஒழுக்க மீறல் ஒன்றிற்கு வேறு அவ்வாறான யாதேனுமொரு குற்றச்சாட்டு தொடர்பாக விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர், விளையாட்டுத்துறை அமைச்சு அல்லது விளையாட்டுத்துறை அபிவிருத்தி அமைச்சினால் நியமிக்கப்பட்ட முறையான குழுவொன்றினால் நடாத்தப்பட்ட விசாரணையின் மூலம் குற்றவாளியாகி இருப்பின் ;

(6) வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கு முன்னர் இரண்டு வருட காலப் பகுதியினுள் ஊடக அமைப்பு ஒன்றுடன் தொடர்புடைய கொடுப்பனவு பெறுகின்ற தொழில்சார் ஊடகவியலாளர் ஒருவராக அல்லது இலத்திரனியல் அல்லது அச்சு ஊடக சுதந்திர பத்திரிகை ஊடகவியலாளர் ஒருவராக யாதேனுமொரு ஊடக அமைப்பிற்கு அல்லது அமைப்பின் உரிமையாளர் அல்லது பகுதியளவிலான உரிமையாளர் அல்லது சம உரிமையாளர் அல்லது பிரதான பங்குதாரர் ஒருவராக செயற்பட்டிருப்பின் ;

(7) (i) குறித்த விளையாட்டுக்களின் தேசிய குழுவில் அல்லது தேசிய அணியின் நடப்பு வீரர் ஒருவராக / வீராங்கனையாக இருப்பின் ;

(ii) குறித்த விளையாட்டுக்களின் தேசிய குழுவில் அல்லது தேசிய அணியின் நடப்பு வீரர் ஒருவரின் / வீராங்கனை ஒருவரின் வாழ்க்கைத் துணையாக, பெற்றாராக அல்லது சகோதர சகோதரியாக இருப்பின் ;

(iii) குறித்த விளையாட்டுக்களின் தேசிய குழுவில் அல்லது தேசிய அணியின் நடப்பு வீரர் ஒருவரின் / வீராங்கனை ஒருவரின் பிரதிநிதி ஒருவராக அல்லது முகாமையாளர் ஒருவராக இருப்பின் ;

(8) வேட்பு மனுக்களை தாக்கல் செய்வதற்கு முன்னர் இரண்டு வருட காலப் பகுதியினுள் அந்தத் தேசிய சங்கத்தின்/சம்மேளனத்தின் தொழில்சார் பயிற்றுவிப்பாளர்/தொழில்நுட்ப அலுவலர்/நடுவர் ஒருவராக பணியாற்றி இருப்பின்;

(9) இலங்கைப் பிரசை ஒருவராக இல்லாத பட்சத்தில் அல்லது பிரசாவுரிமை இல்லாமல் போகும் பட்சத்தில்

(10) வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கு முன்னர் நான்கு வருட காலப் பகுதியினுள் விளையாட்டுடன் தொடர்புடைய விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டுக் கருவிகள் அல்லது விளையாட்டுடன் தொடர்புடைய ஏனைய பிற பொருட்கள் அல்லது உபகரணங்கள் அல்லது சக்திக்கு வலுவூட்டும் உணவுப் பொருட்கள் தேசிய விளையாட்டுக்கள் சங்கத்திற்கு / சம்மேளனத்திற்கு அல்லது வேறு யாதேனுமொரு நிறுவனத்திற்கு விற்பனை செய்யும், மேம்படுத்தம் அல்லது வழங்கும் பணியில் ஈடுபட்டிருப்பின் அல்லது வணிக நோக்கங்களுடன் விளையாட்டுக்களுடன் தொடர்புடைய சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டிருப்பின் ;

(11) இந்த வர்த்தமானப் பத்திரிகையின் அட்டவணை II இல் குறிப்பிட்டுள்ள விளையாட்டொன்று தொடர்பில் பந்தயம் கட்டுதல், சூதாட்ட விளையாட்டு அல்லது பந்தயம் கட்டுதல் என்பன தொடர்பான தொழில்முயற்சி ஒன்றுடன் நேரடி அல்லது மறைமுக தொடர்புடைய அல்லது பந்தயம் கட்டுதல், சூதாட்ட விளையாட்டு அல்லது பந்தயம் கட்டுதல் என்பன தொடர்பான தொழில்முயற்சி ஒன்றில் அல்லது அவ்வாறான போட்டிகள் தொடர்பாக செயற்படுகின்ற நிறுவனம் ஒன்றிலே அல்லது நிறுவனங்களில் அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நபர் ஒருவர் அல்லது அவரது குடும்பத்தைச் சேர்ந்த நெருங்கிய உறுப்பினர் ஒருவர் (வாழ்கைத் துணை, தாய், தந்தை, சகோதரர் ஒருவர், சகோதரி ஒருவர், மகன், மகள், மருமகன், மருமகள்) ஆயின் ;

(12) தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனம் இணைந்து செயற்படும் சர்வதேச விளையாட்டுச் சங்கத்தினால்/ சம்மேளனத்தினால் விதிக்கப்பட்ட தடை ஒன்றிற்கு, இடை நிறுத்தம் ஒன்றிற்கு அல்லது இரத்துச் செய்தல் ஒன்றிற்கு உள்ளாகி இருப்பின் ;

(13) ஊக்குப் பதார்த்தப் பாவனை, ஊழல், பந்தயம் கட்டுதல், சூதாட்ட விளையாட்டு அல்லது ......... வைத்தல் தொழில்முயற்சி மற்றும் உள்ளக தகவல்களை தவறாக பாவித்தல் தொடர்பான குற்றமொன்று தொடர்பாக தேசிய விளையாட்டுக்கள் சங்கம்/சம்மேளனம் ஊக்குப் பதார்த்த ஒழிப்பு அல்லது ஊழல் ஒழிப்பு நியாயசபை ஒன்றினால் அல்லது இலங்கை ஊக்குப் பதார்த்த ஒழிப்பு முகவர் நிறுவகத்தினால் அல்லது உலக ஊக்குப் பதார்த்த ஒழிப்பு முகவர் நிறுவகத்தினால் அல்லது தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனம் இணைந்து செயற்படுகின்ற சர்வதேச விளையாட்டுச் சங்கம்/சம்மேளனம் ஊக்குப் பதார்த்த ஒழிப்பு அல்லது ஊழல் ஒழிப்பு நியாயசபை ஒன்றினால் விதிக்கப்பட்ட தண்டனை ஒன்றிற்கு, தடை ஒன்றிற்கு, இடைநிறுத்தம் ஒன்றிற்கு அல்லது இரத்துச் செய்தல் ஒன்றிற்கு ஆளாகி இருப்பின் ;

(14) மனித வியாபாரத்துடன் நேரடியாக அல்லது மறைமுகமாக சம்பந்தப்பட்டிருப்பின் ;

(15) விளையாட்டுத்துறை அமைச்சரின் அனுமதி அல்லது இணக்கப்பாட்டுடன் விளையாட்டுடன் தொடர்புடைய ஒரு பணிக்காக சர்வதேச விளையாட்டு விழா ஒன்றின் போது நாட்டைப் பிரதிநிதித்துவம் செய்த நபர் ஒருவராக உரிய காலப் பகுதியினுள் மீண்டும் இலங்கைக்கு வருகை தராத ஒரு நபராக இருப்பின் ;

(16) பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அல்லது மாகாண சபை ஒன்றின் அல்லது உள்ளூராட்சி நிறுவனம் ஒன்றிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயரிடப்பட்ட உறுப்பினர் ஒருவராக இருப்பின் ;

(17) அந்த தேசிய தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/சம்மேளனத்தின் உறுப்பினர் தெரிவுக் குழுவின் உறுப்பினர் ஒருவராக இருப்பின் ;

(18) குறிப்பாக குறிப்பிட்டு கூறப்பட்டுள்ள காலப் பகுதியான நிதியாண்டு முடிவடைந்ததில் இருந்து 2 மாதங்களுக்குள் நிறைவேற்றுக் குழுவினால் உறுதிப்படுத்திய நிதிக் கூற்றினை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு தவறும் அல்லது அவ்வாறு செய்வதனை புறக்கணித்துள்ள தேசிய விளையாட்டுச் சங்கம் ஒன்றின் / சம்மேளனம் ஒன்றின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஒருவர் அல்லது காசோலையில் கைச்சாத்திடும் அலுவலர் ஒருவர் வேறு பொறுப்புக் கூறும் நபர் ஒருவராக பதவி வகித்த நபர் ஒருவர் அது தொடர்பாக விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் அல்லது விளையாட்டுத்துறை அமைச்சினால் அல்லது விளையாட்டுக்கள் அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற விசாரணை ஒன்றிலே குற்றவாளியாகி இருக்கும் பட்சத்தில் ;

(19) கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் முறைகேடான பாவனையொன்று, நிதி மோசடியொன்று அல்லது வேறு யாதேனுமொரு துஷ்பிரயோகம் தொடர்பாக தெளியவந்ததன் பின்னர், அது தொடர்பாக முறையான குழுவொன்றினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை ஒன்றின் போது குற்றவாளியாகி இருப்பின் ;

(20) தேசிய விளையாட்டுக்கள் சங்கத்திடம்/சம்மேளனத்திடம் ஏதேனுமொரு விதத்தில் நேரடியாக அல்லது மறைமுகமாக யாதேனுமொரு பெறுகை தொடர்பாக பொறுப்பினைக் கொண்டுள்ள நபர் ஒருவராக அமையும் பட்சத்தில் ;

(21) போட்டி நிர்ணய தவறுக்கான குற்றவாளியாக அமைந்திருக்கும் பட்சத்தில் ;

7. இவற்றிற்கு மேலதிகமாக சகல தேசிய விளையாட்டுக்கள் சங்கமொன்றின்/சம்மேளனம் ஒன்றின் யாப்பு பின்வரும் விடயங்களையும் உள்ளடக்கி இருத்தல் வேண்டும்.

(1) யாப்பிற்கு ஏற்ப சுதந்திரமாகவும் மற்றும் நியாயமாகவும் தேசிய விளையாட்டுக்கள் சங்கத்தின்/சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கான தெரிவினை நடாத்துதல் ;

(2) தமது இணைந்த நிறுவனங்களின், விளையாட்டுச் சங்கங்களின் மற்றும் ஏனைய சங்கங்களின் வாக்குரிமை மற்றும் பிரதிநிதித்துவம் செய்யும் விதம் ;

(3) குறித்த மாவட்டத்தினுள் சம்பந்தப்பட்ட இணைந்த நிறுவனங்கள், விளையாட்டுச் சங்கங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்யும் பொறுப்பு ஒப்படைக்கப்படுகின்ற மாகாண அல்லது மாவட்ட அலுவலர்களை நியமித்தல் மற்றும் தேசிய விளையாட்டுக்கள் சங்கத்திற்கு/சம்மேளனத்திற்கு அது தொடர்பாக அறிக்கையிடல் ;

(4) I ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள "ஈ" மாதிக்கேற்ப தயாரிக்கப்பட்ட இணைந்த நிறுவனங்களின், விளையாட்டுச் சங்கங்களின் மற்றும் ஏனைய அமைப்புக்களின் தகவல் அறிக்கை ஒன்றினை பேணிவருதல் ;

(5) ஆகக் குறைந்தது மாதம் ஒருமுறையாவது தேசிய விளையாட்டுக்கள் சங்கங்களின்/சம்மேளனங்களின் குழுக் கூட்டங்களை நடாத்துதல் மற்றும் ஆகக் குறைந்தது பாடசாலை சங்கங்களின் பிரதிநிதி ஒருவராவது அவ்வாறான கூட்டங்களில் பங்கேற்றல் வேண்டுமென ;

(6) ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கு ஆகக் குறைந்தது 14 நாட்களுக்கு முன்னர் அதன் இணைந்த நிறுவனங்கள், விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் ஏனைய அமைப்புகளுக்கு பின்வரும் ஆவணங்களை உள்ளடக்கிய எழுத்துமூல அறிவித்தல் ஒன்றினை வெளியிடுதல் வேண்டும்.

[i] ஆண்டறிக்கை ;
[ii] ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கு வருகைத் தந்து வாக்களிக்கும் உரிமையுள்ள இணைந்த நிறுவனங்களின் வாக்காளர் இடாப்பு ;
[iii] முன்னைய நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கு அறிக்கையின் பிரதியொன்று அல்லது கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் பெயரிடப்பட்ட கணக்காய்வு நிறுவனத்தினால் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கு அறிக்கையின் பிரதியொன்று ;
[iv] முன்னைய நிதி ஆண்டிற்குரிய குறித்த தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோரால் உறுதிப்படுத்தப்பட்ட கணக்கு அறிக்கையின் பிரதியொன்று;

(7) தமது இணைந்த நிறுவனங்களின், விளையாட்டுச் சங்கங்களின் மற்றும் ஏனைய அமைப்புக்களின் செயல்முறை இருப்பினை ஊக்குவிப்பதற்காக குறித்த போட்டிகள் எண்ணிக்கையில் பங்கேற்பதனை கட்டாயப்படுத்தல் மற்றும் பங்கேற்க வேண்டிய போட்டிகளில் பங்கேற்காத யாதேனுமொரு அங்கத்துவ இணைந்த நிறுவனம், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் ஏனைய அமைப்புகளுக்கு வாக்குரிமையினை இரத்துச் செய்தல் ;

(8) புதிய அங்கத்தவர்களாக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற கூட்டத்தின் போது புதிய உறுப்பினர்களுக்கு வாக்குரிமையினை பெற்றுக்கொடுக்காதிருத்தல்

(9 ) தேசிய விளையாட்டுக்கள் சங்கம் ஒன்றின்/சம்மேளனம் ஒன்றின்புதிய குழுக்களை நியமிப்பதற்கு முன்னர் காணப்பட்ட குழுவில் இருந்த அலுவலர்களினால் அந்த சங்கத்துடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பான அனைத்து ஆவணங்கள், கடவுச் சொற்கள், வங்கிக் கணக்கு விபரங்கள் மற்றும் இலத்திரனியல் தரவுகள்

என்பவற்றினை குறித்த புதிய குழு நியமிக்கப்பட்ட தினத்தில் இருந்து ஏழு நாட்களுக்குள் அந்த புதிய குழுவிற்கு தெரிவு செய்யப்பட்ட அலுவலர்களிடம் ஒப்படைப்பதனை கட்டாயப்படுத்தல் ;

(10) பின்வரும் குழுக்களுக்கு நியமிக்கும், வெளியேற்றும், தகைமைகள், சேர்க்கைகள், கால எல்லை மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான நடவடிக்கை முறைகள் என்பவற்றினை விசேடமாகக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.
[i] தேர்தல் குழு
[ii] தீர்மானம் எடுத்தல் குழு
[iii] தேசிய தெரிவுக் குழு
[iv] வகைப்படுத்தல் குழு
[v] தரப்படுத்தல் குழு
[vi] தொழில்நுட்பக் குழு
[vii] நிதிக் குழு
[viii] ஒழுக்காற்றுக் குழு

(11) வருடாந்த பொதுக் கூட்டத்தின் போது தமது வாக்கினை அளிப்பதற்காக வாக்குரிமை வழங்கப்பட்ட இணைந்த நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள் அல்லது பிற அமைப்புக்களினால் பெயரிடப்படுகின்ற நபர்களின் பெயர்கள், ஆண்டு பொதுக் கூட்டத்திற்கு /அங்கத்தவர் தெரிவிற்கு ஆகக் குறைந்தது 07 நாட்களுக்கு முன்னர் தேசிய சங்கத்திற்கு/சம்மேளனத்திற்கு அறிவித்தல் வேண்டுமென ஏற்பாடுகளை செய்தல்

(12) கூட்டநடப்பெண் இல்லாத காரணத்தினால் தேசிய விளையாட்டுச் சங்கம் ஒன்றின்/சம்மேளனம் ஒன்றின் வருடாந்த பொதுக் கூட்டத்தை பிற்போடும் சந்தர்ப்பத்தில் அந்த நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப கூட்டத்தை மீண்டும் அழைக்குமாறு 14 நாட்களுக்கு முன்னர் எழுத்துமூல அறிவித்தல் ஒன்றினை வழங்குதல் வேண்டுமென்ற நடவடிக்கை முறை

(13) அங்கத்துவ இணைந்த சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்களின் கணக்குப் புத்தகங்களை உரியவாறு பேணிவருவதை கட்டாயப்படுத்தல்

(14) அங்கத்துவ இணைந்த சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்களினால் ஆண்டுப் பொதுக் கூட்டம், முறையான அங்கத்தவர் தெரிவு மற்றும் கணக்குகளைப் பேணிவருவதற்கு தவறும் பட்சத்தில், வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பங்கேற்றல் மற்றும் வாக்களித்தல் என்பன இல்லாமல் போவதாக குறிப்பிடுதல்

(15) யாதேனுமொரு நபர் இலங்கையின் பிரசை மற்றும் விளையாட்டுப் பின்னணியினைக் கொண்ட நபர் ஒருவராக இல்லாத பட்சத்தில், அவர் தேசிய விளையாட்டுச் சங்கம் ஒன்றின்/ சம்மேளனம் ஒன்றின் பிரதிநிதியாக அதனுடன் தொடர்புடைய சர்வதேச இணைந்த சங்கத்தில் அல்லது பிற சர்வதேச சம்மேளனம் ஒன்றிற்கு நியமிக்கப்பட மாட்டார் என்பதனை உறுதிப்படுத்தல்

(16) தேசிய விளையாட்டுச் சங்கங்களினால் பயிற்றுவிப்பாளர்கள், கண்காணிப்பு நடுவர்கள், மற்றும் போட்டி நடுவர்கள் ஆகியோரை நியமிக்கும் மற்றும் அவ்வாறான பயிற்றுவிப்பாளர்கள், கண்காணிப்பு நடுவர்கள், மற்றும் போட்டி நடுவர்கள் ஆகியோரை முகாமைத்துவம் மற்றும் கண்காணிக்கும் நடவடிக்கை முறையினை நிர்ணயித்தல் ;

(17) குறித்த சர்வதேச இணைந்த சங்கங்களில் குறித்துக் கூறப்பட்டுள்ள தேவைகளுக்கு ஏற்ப தமது வீரர்கள், அங்கத்தவர்கள், பயிற்றுவிப்பாளர்கள், நிர்ணயிப்பாளர்கள், நடுவர்கள் மற்றும் ஏனைய அனைத்து அலுவலர்கள் தொடர்பாகவும் நன்நெறி முறைமை ஒன்றினைத் தயாரித்தல் ;

(18) தேசிய விளையாட்டுச் சங்கம் ஒன்றின்/சம்மேளனம் ஒன்றின் இணைந்த நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்களின் பொறுப்புக்களை விசேடமாகக் குறிப்பிடல் ;

(19) உலக ஊக்குப் பதார்த்த ஒழிப்பு முகவர் நிறுவன சட்டக் கோவை மற்றும் இலங்கை ஊக்குப் பதார்த்த ஒழிப்புச் சட்டக் கோவைக்கு இணங்குதல் ;

(20) சம்பந்தப்பட்ட இணைந்த சர்வதேச அமைப்பின் ஏற்பாடுகள் மற்றும் இலங்கையின் சட்டங்களுக்கு இடையே முரண்பாடு ஒன்று காணப்படின், இலங்கைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுமென குறிப்பாகக் குறிப்பிடுதல் ;

(21) இலங்கையின் சகல கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளிலும் விளையாட்டினை மேம்படுத்துவதற்காக பிரதேச விளையாட்டுக் கழகங்கள், மாவட்ட விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் மாகாண விளையாட்டுச் சங்கங்கள் என்பவற்றினை நிறுவுவதற்கு முயற்சித்தல் வேண்டுமென விசேடமாகக் குறிப்பிடுதல் மற்றும் விளையாட்டினை நேசிக்கும் அனைத்துப் பிரசைகளுக்கும் தாம் விரும்பியதொரு விளையாட்டில் ஈடுபடுவதற்கான மனிதாபிமான உரிமையினைப் பெற்றுக்கொடுத்தல் அவ்வாறான விளையாட்டுச் சங்கம் ஒன்றின் பொறுப்பெனக் குறிப்பிடுதல் ;

**தேசிய விளையாட்டுச் சங்கம் / சம்மேளனங்களின் தேசிய தெரிவுக் குழுக்கள்**

8. (1) இங்கு இதற்கு முன்னர் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக தேசிய விளையாட்டுச் சங்கங்கள்/ சம்மேளனங்களின் நடவடிக்கை முறைகளுக்கு மேலதிகமாக தேசிய விளையாட்டுச் சங்கங்கள்/ சம்மேளனங்களின் தேசிய தெரிவுக் குழுக்களுடன் தொடர்புடையதாக இங்கு இதனகத்துப் பின்னர் குறிப்பிட்டுள்ள விடயங்கள் தொடர்புடையதாதல் வேண்டும்.

(2) சகல தேசிய விளையாட்டுச் சங்கங்கள்/சம்மேளனங்களினதும் சர்வதேச மட்டத்திலான போட்டிகளின் போது இலங்கையினைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக பங்கேற்போர் / போட்டியாளர்கள் தெரிவிற்காக விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அனுமதியுடன் தேர்ந்தெடுக்க வேண்டிய தேசிய தெரிவுக் குழு ஒன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) குறித்த விளையாட்டிற்கு விசேட சேவையாற்றியுள்ள அல்லது குறித்த விளையாட்டினுள் விசேட நிலையொன்றினைப் பெற்றுள்ள உறுப்பினர்கள் ஐந்து பேரினைக் கொண்டதாக தேசிய தெரிவுக் குழு அமைதல் வேண்டும். குறித்த விளையாட்டானது பெண்களும் பங்கேற்கும் ஒன்றாயின் குறித்த ஐந்து உறுப்பினர்களில் ஆகக் குறைந்தது ஒருவராவது பெண்ணாக இருத்தல் வேண்டும்.

(4) தேசிய விளையாட்டுச் சங்கங்களின்/சம்மேளனங்களின் தேசிய தெரிவுக் குழு இரண்டு (02) வருட காலப் பகுதிக்கு நியமிப்பதற்காக குறித்த தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனம் தமது விளையாட்டுச் சங்கத்துடன்/சம்மேளனத்துடன் இணைந்த அனைத்து அங்கத்துவ நிறுவனங்களையும் உரியவாறு விளக்கமளித்து வேட்டு மனுக்களைப் பெற்றுக்கொண்டு நிறைவேற்றுக்குழு கூட்டம் ஒன்றிலே மிகவும் பொருத்தமான உறுப்பினர்கள் பத்து பேரினை (10) தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(5) தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனங்களின் தேசிய தெரிவுக் குழுக்களுக்கு குறித்த தேசிய சங்கங்களினால் பத்து பேரினது வேட்பு மனுக்கள் தேசிய விளையாட்டுக்கள் தெரிவுக் குழுவிடம் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், தேசிய விளையாட்டுக்கள் தெரிவுக் குழுவினால் குறித்த வேட்பு மனுக்களில் பொருத்தமான நபர்கள் ஐந்து பேரினை தேர்ந்தெடுத்து அதில் ஒரு நபரை தலைவராக பெயரிட்டு குறித்த வேட்பு மனுக்களை விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்தின் பரிந்துரைக்காக அனுப்புதல் வேண்டும். குறித்த வேட்பு மனுக்களுக்கு விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்தின் சிபாரிசு கிடைக்கப் பெற்றதன் பின்னர் இறுதி அனுமதிக்காக விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(6) சகல தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனங்களின் தெரிவுக் குழுவினை நியமித்தல் தொடர்பான சிபாரிசுகளை வழங்கும் அதிகாரம் தேசிய விளையாட்டுக்கள் தெரிவுக் குழுவிடம் காணப்படும்.

(7) தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனங்களின் தெரிவுப் பரீட்சை இடம்பெறுகின்ற திகதி, இடம், குறித்த விபரங்கள் மற்றும் தெரிவு பற்றிய நிர்ணயங்கள் பற்றிய தகவல்கள் 14 நாட்களுக்கு முன்னர் வீரர்கள் / வீராங்கனைகளுக்கு அறிவித்தல் வேண்டும். அந்த அனைத்து விபரங்களினதும் பிரதிகள் அன்றைய தினமே தேசிய விளையாட்டுக்கள் தெரிவுக் குழுவிற்கும் எழுத்து மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறான தகவல்களை சமர்ப்பிக்காத தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனங்களின் தெரிவுப் பரீட்சைகள் மற்றும் தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனங்களின் தலைவர், செயலாளர் மற்றும் பயிற்றுவிப்பாளரின் தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் நடைபெறுகின்ற தெரிவுப் பரீட்சைகளை இரத்துச் செய்வதற்கு தேசிய விளையாட்டுக்கள் தெரிவுக் குழுவிற்கு அதிகாரம் உண்டு.

(8) சகல தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனங்கள் தெரிவுப் பரீட்சை நடாத்துவதற்கு 28 நாட்களுக்கு முன்னர் தேசிய விளையாட்டுக்கள் தெரிவுக் குழுவிற்கு தெரிவு அளவுகோள்களை சமர்ப்பித்தல் வேண்டும்

என்பதுடன், குறித்த தெரிவு அளவுகோள்களை அவர்களது உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் வெளியிடுதல் வேண்டும்.

(9) தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனங்களின் தெரிவுப் பரீட்சைகளின் இறுதியில் தேசிய விளையாட்டுக்கள் தெரிவுக் குழுவிடம் கிடைக்கப் பெறுகின்ற அனைத்து மேன்முறையீடுகள்/ முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகளை நடாத்துவதற்கும் மற்றும் பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்குமான அதிகாரம் தேசிய விளையாட்டுக்கள் தெரிவுக் குழுவிடம் காணப்படுகின்றன.

(10) சகல தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனங்களின் தெரிவுப் பரீட்சைகளின் இறுதி பெறுபேறுகள் ஆவணம் அனைத்து விபரங்களுடன் தேசிய விளையாட்டுச் சங்கங்களின் / சம்மேளனங்களின் உத்தியோகபூர்வ இணையத் தளங்களில் வெளியிடுதல் வேண்டும்.

(11) சகல தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனங்களின் தெரிவுப் பரீட்சைகளுக்கு விளையாட்டுத்துறை அமைச்சின் குறித்த தேசிய விளையாட்டிற்குப் பொறுப்பான கருத்திட்ட அலுவலரின் பங்கேற்பினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும் என்பதுடன் தேசிய தெரிவுக் குழுவிற்கும் அறிவித்தல் வேண்டும்.

(12) தேசிய விளையாட்டுக்கள் தெரிவுக் குழுவினால் அனைத்துத் தேசிய குழக்களில் விளையாட்டு வீர வீராங்கனைகளின் விபரங்கள் தொடர்பான தரவுகள் களஞ்சியம் ஒன்றினைத் தயாரித்து இற்றைப்படுத்தி வருதல் வேண்டும். தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனங்களின் தேசிய குழுக்களில் உள்ள சகல வீர வீராங்கனைகளின் திறமைகள் மற்றும் சுயவிபரம் பற்றிய தகவல்கள் சகல தேசிய விளையாட்டுச் சங்கம்/ சம்மேளனத்தினால் தேசிய விளையாட்டுக்கள் தெரிவுக் குழுவிடம் அனுப்பி வைத்தல் வேண்டும். தேசிய குழுவினைப் பெயரிட்டதன் பின்னர் வீர வீராங்கனைகளை உட்சேர்த்தல்/அகற்றுதல் பற்றிய தகவல்கள் சகல தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனங்களினால் தேசிய விளையாட்டுக்கள் தெரிவுக் குழுவிற்கு பெற்றுக்கொடுத்தல் வேண்டும்.

(13) தேசிய விளையாட்டுக்கள் தெரிவுக் குழு சர்வதேச போட்டித் தொடர் ஒன்றுக்காக பயிற்றுவிப்பாளர்கள்/ உடற்சிகிச்சையாளர்களை பரிந்துரைக்கும் போது பொருத்தமான முறைமை ஒன்றினை கடைபிடித்தல் வேண்டும் என்பதுடன், பின்வரும் அளவுகோள்களுக்கு ஏற்ப தேசிய விளையாட்டுக்கள் தெரிவுக் குழுவின் அனுமதியினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

[i] இதுவரை காலமும் விளையாட்டுத் துறைக்குக் கிடைக்கப் பெற்ற பங்களிப்பு
[ii] விளையாட்டுத்துறையில் அவர்களது நிகழ்கால செயலாற்றுகை
[iii] குறித்த விளையாட்டு பற்றிய அறிவு, விளக்கம் மற்றும் அனுபவம்
[iv] வீரர் ஒருவராக / பயிற்றுவிப்பாளர் ஒருவராக காட்டுகின்ற திறமைகள்
[v] குறித்த விளையாட்டுச் சங்கத்தின் ஊடாக அல்லது தேசிய விளையாட்டுக்கள் கற்கை நிறுவகம் ஊடாக வழங்கப்பட்ட பயிற்சி அனுமதிப் பத்திரம் ஒன்றினைக் கொண்டுள்ள நபர் ஒருவராக இருத்தல்.

## பகுதி III

### தேசிய விளையாட்டுச் சங்கங்களின்/சம்மேளனங்களின் பணிகள், அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்கள்

9. சகல தேசிய விளையாட்டுக்கள் சங்கத்திற்கும்/சம்மேளனத்திற்கும் பின்வரும் பணிகள், அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்கள் காணப்படுதல் வேண்டும்.

(1) சகல தேசிய விளையாட்டுக்கள் சங்கத்தினாலும்/சம்மேளனத்தினாலும் கட்டாயமாக வருடாந்த தேசிய போட்டித்தொடர் ஒன்றினை நடாத்துதல் வேண்டும்.

(2) இலங்கையின் சகல மாவட்டங்களிலும் குறித்த விளையாட்டினை அபிவிருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்தல், மற்றும் பிரபல்யப்படுத்தல் என்பவற்றிற்குத் தேவையான வசதிகளை விருத்தி செய்தல்.

(3) குறித்த விளையாட்டின் தரம்/சர்வதேச தரப்படுத்தல் மட்டத்திற்கு உயர்த்துதல்.

(4) தேசிய அணியின் செயலாற்றுகை மட்டத்திற்கு உயர்த்துதல்.

(5) குறித்த விளையாட்டுக்களுக்கு சிறந்த திறமையுள்ள அனைத்து வயது மட்டங்களையும் சேர்ந்த நபர்களை இனங்கண்டு சகல வழிகளிலும் மற்றும் விதங்களிலும் அவர்களுக்கு உதவி செய்தல்.

(6) அமைச்சரினால் நியமிக்கப்படுகின்ற தேசிய விளையாட்டுக்கள் தெரிவுக் குழுவின் அனுமதியுடன் குறித்த சர்வதேச விளையாட்டுக்கள் சம்மேளனங்களினால் குறித்து குறிப்பிடுகின்ற தெரிவு செய்வதற்கான அளவுகோல்களை உரியவாறு கவனத்திற் கொண்டு வீரர்களை தேர்ந்தெடுப்பதற்காகவும் மற்றும் விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்தின் ஒருங்கிணைப்புடன் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக வெளிப்படையான தன்மையுடன் கூடிய தேர்ந்தெடுப்பதற்கான அளவுகோள்களை தயாரித்தல் வேண்டும்.

(7) தேசிய விளையாட்டுச் சங்கம்/தேசிய சம்மேளனம் என்பவற்றின் நிருவாகத்தின் போது மற்றும் வழிநடாத்தும் போது வெளிப்படையான தன்மையினை உறுதிப்படுத்தல்.

(8) வீரர்களின் திறமைகள் மற்றும் தேர்ச்சிகள் என்பவற்றினை விருத்தி செய்வதற்காக பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் ஒன்றினை நடாத்துதல்.

(9) வீரர்களின் சுயவிபரம், பங்கேற்ற போட்டிகள், பிரதிநிதித்துவப்படுத்திய அணிகள், அவர்களது செயலாற்றுகை தொடர்பான தகவல்கள் மற்றும் தெரிவு, தரப்படுத்தல் மற்றும் வகைப்படுத்தல் என்பன பெற்றுக்கொடுத்துள்ள சந்தர்ப்பங்களின் போது குறித்த தரவுகளைப் பயன்படுத்துவதன் ஊடாக உயர் தேர்ச்சிமிக்க வீரர்களை இனங்காணும் தகவல் முறைமைகளை பேணி வருதல்.

(10) நிதி உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக விளையாட்டுத்துறை அமைச்சுடன் புரிந்துணர்வு உடன்படிக்கைகளை செய்துகொள்ளல்.

(11) நடப்பு சர்வதேச வகைப்படுத்தல் மட்டம், கால எல்லை என்பவற்றினுள் உத்தேச இலக்கு மற்றும் செயலாற்றுகை மட்டம் என்பவற்றினை மேம்படுத்தும் தந்திரோபாயங்கள் உட்பட 05 வருட காலப் பகுதிக்கு இணைந்த திட்டம் ஒன்றினைத் தயாரித்தல் வேண்டும்.

(12) எதிர்வரும் ஆண்டுக்கான வருடாந்த தொழிற்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் அதன் தொழிற்பாட்டுத் திட்டத்தை நடப்பு ஆண்டு முடிவடைவதற்கு மூன்று வருடங்களுக்கு முன்னர் விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(13) சகல தேசிய விளையாட்டுக்கள் சங்கம் / சம்மேளனத்தினாலும் உறுதிப்படுத்திய நிதிக் கூற்றுக்கள் ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்து இரண்டு மாதங்கள் கடப்பதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(14) ஆகக் குறைந்தது ஒரு பஞ்ஜாங்க மாதத்திற்கு ஒருமுறையாவது தேசிய விளையாட்டுச் சங்கங்களின் குழுக் கூட்டங்களை நடாத்துதல் வேண்டும். அதற்காக பாடசாலை விளையாட்டுச் சங்கங்களின் பிரதிநிதிகளை பங்கேற்கச் செய்தல் வேண்டும்.

(15) சகல தேசிய விளையாட்டுக்கள் சங்கமும் / சம்மேளனமும் மாதாந்த நிறைவேற்றுக் குழு கூட்டம் ஒன்றினை நடாத்துவதற்கு 07 நாட்களுக்கு முன்னர் விழிப்பூட்டல் பெற வேண்டிய சகல தரப்பினரையும் விழிப்பூட்டல் வேண்டும்.

(16) சகல தேசிய விளையாட்டுக்கள் சங்கத்திற்கும் / சம்மேளனத்திற்கும் இணைந்த சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்கள் ஆண்டுப் பொதுக் கூட்டத்தை நடாத்துதல், முறையான அங்கத்தவர் தெரிவுகளை நடாத்துதல் மற்றும் உரியவாறு கணக்குப் பணிகளை பேணிவருதல் வேண்டும். மேலே குறிப்பிட்ட இணைந்த சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்கள் தேசிய சங்கத்தின் 3 குழுக் கூட்டங்களில் தொடர்ச்சியாக பங்கேற்பதற்கு தவறும் பட்சத்தில் அந்த இணைந்த சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் ஏனைய அமைப்புகளுக்கு தேசிய சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பங்கேற்றல் அல்லது தேசிய சங்கத்தின் தேர்தலின் போது அல்லது வேறு வாக்களிக்கும் சந்தர்ப்பத்தின் போது வாக்குரிமை இரத்தாதல் வேண்டும்.

(17) சகல தேசிய விளையாட்டுக்கள் சங்கம் / சம்மேளனமும் விளையாட்டுத்துறை அமைச்சின் அனுமதியுடன் தமது சர்வதேசச் சங்கத்தின்/சம்மேளனத்தில் உத்தியோகபூர்வமாக பதிவு செய்திருத்தல் வேண்டும். அந்த தேசிய சங்கத்திற்கு/சம்மேளனத்திற்கு இணைந்த விளையாட்டுச் சங்கங்கள் அல்லது வேறு யாதேனுமொரு இணைந்த அமைப்புக்கள் குறித்த சர்வதேச சம்மேளனத்தின் அல்லது சங்கத்தின் பதிவு செய்யக் கூடாது. அவ்வாறே மேலே குறிப்பிட்ட விதத்திலான பதிவொன்றை பேணிவரவும் கூடாது.

(18) அந்த தேசிய சங்கத்திற்கு / சம்மேளனத்திற்கு இணைந்த யாதேனுமொரு சங்கம் அல்லது அமைப்பு சர்வதேச சங்கம் ஒன்றுடன் இலங்கையின் தேசிய சங்கத்திற்கு புறம்பாக தொடர்பு ஒன்றினை பேணிவரும் பட்சத்தில், விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்தினால் சர்வதேச சம்மேளனத்தில் அல்லது சங்கத்தின் பதிவு செய்வதற்காக தேசிய சம்மேளனத்திற்குத் தேவையான பொருத்தமான சூழலை உருவாக்கிக் கொடுத்தல் வேண்டும்.

(19) யாதேனுமொரு தரப்பினால் தனிப்பட்ட மட்டத்தில் நடாத்திச் செல்கின்ற விளையாட்டு அகடமி ஒன்று, விளையாட்டுப் பாடசாலை ஒன்று, பயிற்சி முகாம் ஒன்று, சர்வதேச பாடசாலை ஒன்று அல்லது வேறு அவ்வாறான ஒரு நிறுவனத்தின் ஊடாக யாதேனுமொரு விளையாட்டுப் போட்டி, பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்று அல்லது விளையாட்டுடன் தொடர்புடைய வேறு அவ்வாறான கருத்திட்டம் ஒன்றினை நடாத்துவதாயின் குறித்த விளையாட்டுப் போட்டி பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் அல்லது கருத்திட்டம் தொடர்பாக குறித்த விளையாட்டின் பதிவு தேசிய விளையாட்டுக்கள் சங்கம் / சம்மேளனத்திடம் அல்லது விளையாட்டுத்துறை அமைச்சிடம் உரியவாறு அனுமதியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(20) இப்போட்டித் தொடருக்காக வெளிநாட்டு வீரர்கள் வீராங்கனைகள் பங்கேற்கும் பட்சத்தில் அந்த வெளிநாட்டு வீரர்கள் வீராங்கனைகள் தொடர்பான மற்றும் நடாத்தும் போட்டிகள் தொடர்பாக முழுமையான அறிக்கையொன்று விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்திற்கு போட்டி நடைபெறுவதற்கு 21 நாட்களுக்கு முன்னர் பெற்றுக்கொடுத்தல் வேண்டும். இவ்வாறு தனிப்பட்ட மட்டத்திலான போட்டித் தொடர்களை நடாத்தும் போது அந்த போட்டித் தொடர்களுக்கு இலங்கை அல்லது தேசிய ஆகிய பெயர்கள் பதிலீடு செய்யப்படலாகாது. அந்தப் போட்டித் தொடர்களை நடாத்தும் போது இலங்கை அல்லது தேசிய என்ற பெயர்கள் பயன்படுத்தியதாக யாதேனுமொரு தகவல், முறைப்பாடு கிடைக்கப் பெற்றால் அது பற்றிய விசாரணை ஒன்றினை மேற்கொண்டு குறித்த விளையாட்டுப் போட்டிகளை ஏற்பாடு செய்த நிறுவனத்திற்கு அல்லது நபருக்கு விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அனுமதியுடன் 10 வருட விளையாட்டுத் தடையொன்றினை விதிப்பதற்கு விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு.

(21) மேலே குறிப்பிட்ட எந்த விதத்திலும் விளையாட்டுடன் தொடர்புடைய நிகழச்சித் திட்டம் ஒன்றினை சுற்றுலா வளயத்தினுள் அல்லது வேறொரு இடத்தில் சுற்றுலா மேம்படுத்தல் நோக்கில் நடாத்துவதாயின், அதற்காக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை பங்கேற்கச் செய்யும் சந்தர்ப்பத்தில் அது பற்றி விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு என்பவற்றிடம் உரிய முறையில் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(22) தேசிய விளையாட்டுச் சங்கங்களின் கீழ்மட்ட அலகாகக் காணப்படுகின்ற பிரதேச விளையாட்டுக் கழகங்களில் இருந்து மாவட்ட விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் மாகாண விளையாட்டுச் சங்கங்கள், தேசிய விளையாட்டுச் சங்கத்தின் ஏனைய அங்கத்துவ பிரதான விளையாட்டுக் கழகங்களினதும் கண்காணிப்பு மற்றும் ஒழுங்குபடுத்தல் பணிகள் இலகுபடுத்தும் வகையில் விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்திடம் அறிக்கைகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

(23) மாவட்ட விளையாட்டுச் சங்கத்தினால் தமது அதிகாரப் பிரதேசத்தினுள் குறித்த விளையாட்டினை மேம்படுத்தல் மற்றும் கண்காணித்தல் என்பன மேற்கொள்ளப்படல் வேண்டும். வருடாந்தம் பிராந்திய ரீதியில் 02 இற்கு குறையாத போட்டித் தொடர்களை நடாத்துதல், வீரர்களின் பயிற்சி மற்றும் நிரந்தர அணியினை நடாத்திச் செல்லல் மற்றும் மாவட்டச் சங்கங்களினால் உரிய முறைமை ஒன்றின் பிரகாரம் பிராந்திய விளையாட்டுக் கழகங்களின் ஒழுங்குபடுத்தல் மற்றும் கண்காணித்தல் பணிகளை மேற்கொள்வதா என்பதனை விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(24) மாகாண விளையாட்டுச் சங்கத்தினால் தமது அதிகாரப் பிரதேசத்தினுள் மாவட்டங்களுக்கு இடையிலான 02 இற்குக் குறையாத மாவட்டப் போட்டித் தொடர்களை வருடாந்தம் நடாத்தியிருத்தல், வீரர்களின்

பயிற்சி மற்றும் நிரந்தர மாகாண அணி என்பவற்றினை நடாத்திச் செல்லல். தமது அதிகாரப் பிரதேசத்தினுள் குறித்த விளையாட்டினை மேம்படுத்தல், மாகாண விளையாட்டுச் சங்கங்களினால் மாவட்ட விளையாட்டுச் சங்கங்களின் ஒழுங்குபடுத்தல் மற்றும் கண்காணித்தல் என்பன உரிய முறையில் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பது பற்றிய தகவல்களை விளையாட்டுப் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிடல் என்பவற்றினை மேற்கொள்ளல் வேண்டும்.

10. இவற்றிற்கு மேலதிகமாக சகல தேசிய விளையாட்டுக்கள் சங்கத்திற்கும்/ சம்மேளனத்திற்கும் பின்வரும் பணிகள், அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்கள் காணப்படுதல் வேண்டும்.

(1) அனைத்து தேசிய விளையாட்டுச் சங்கங்களும் / தேசிய சம்மேளனங்களும் நடாத்திய வருடாந்த தேசிய போட்டித் தொடர் தொடர்பாக முழு விபரத்துடன் கூடிய அறிக்கையொன்று அந்தப் போட்டித் தொடர் முடிவடையும் தினத்தில் இருந்து 14 நாட்களுக்குள் விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அந்த அறிக்கையில் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோர் உண்மையான அறிக்கை என கையொப்பமிட்டு பதவி இலச்சினையுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) யாதேனுமொரு தேசிய விளையாட்டுச் சங்கத்திற்கு / தேசிய சம்மேளனத்திற்கு வெளிநாட்டைச் சேர்ந்த யாதேனுமொரு போட்டித் தொடரில் பங்கேற்பதற்காக அழைப்பு கிடைக்கப்பெற்றவுடன், அந்த அழைப்பின் பிரகாரம் வீர வீராங்கனைகள் அல்லது விளையாட்டு அணி தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும்.

(3) அந்த வீர வீராங்கனைகள் அல்லது விளையாட்டு அணிகளை தேர்ந்தெடுக்கும் போது,

[i] யாதேனுமொரு தகுதி மட்டமொன்று குறித்த வெளிநாட்டினால் வழங்கப்பட்டிருப்பின் அதற்கேற்ப தேர்ந்தெடுத்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

[ii] அவ்வாறு தகுதி மட்டமொன்று வழங்கப்படாத சந்தர்ப்பத்தில் உரிய தேசிய சங்கத்தினால் தேசிய தெரிவுக் குழுவுடன் கலந்துரையாடி தகைமை செயற்பாடு ஒன்றினை தயார்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

[iii] குழுப் போட்டியொன்றிற்காக அழைப்பு விடுக்கப்பட்டுள்ள பட்சத்தில் அந்த அழைப்பிற்கேற்ப மாத்திரம் குறித்த அணியை தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(4) உரிய தேசிய தெரிவுக் குழுவினால் குறித்த விளையாட்டு அணி அல்லது வீரர்கள்/வீராங்கனைகள் தேர்ந்தெடுத்து இறுதி பெயர் பட்டியல் குறித்த தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழுவிடம் ஆற்றுப்படுத்தி நிறைவேற்றுக் குழுவின் அனுமதியுடன் விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்தின் சிபாரிசுக்காக சமர்ப்பித்தல் வேண்டும். விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்தினால் குறித்த பெயர் பட்டியலுக்கு தேசிய விளையாட்டுக்கள் தெரிவுக் குழுவின் சிபாரிசை பெற்றுக்கொள்ளல் வேண்டும் என்பதுடன் அந்த சிபாரிசை பெற்றுக்கொண்டதன் பின்னர் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரின் சிபாரிசுக்காக ஆற்றுப்படுத்தல் வேண்டும். அதன் பின்னர் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரினால் அமைச்சரின் இறுதி அனுமதிக்காக சமர்ப்பித்தல் வேண்டும்.

(5) அவ்வாறு தேசிய தெரிவுக் குழு ஒன்றின் ஊடாக தேர்ந்தெடுக்கின்ற அனைத்து வீர வீராங்கனைகளும் குறித்த தேர்ந்தெடுக்கும் செயற்பாட்டினுள் தேசிய விளையாட்டுக்கள் மருத்துவ நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற மருத்துவ பரிசோதனையொன்று மற்றும் உடற் தகுதி பரிசோதனை ஒன்றில் தோற்றி சித்தியடைதல் கட்டாயமானதாகும்.

(6) சம்பந்தப்பட்ட எந்தவொரு வீரரும் / விளையாட்டு அணியொன்றும் வெளிநாடு செல்வதற்கு, இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடுவதற்கு, இலங்கை என்ற பெயரை உபயோகித்தல் மற்றும் இலங்கை நிறத்துடனான இலச்சினையை அணிவதற்கு சட்டரீதியான அனுமதி கிடைக்கப் பெறுவது விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அனுமதி கிடைக்கப் பெற்றதன் பின்னராகும்.

(7) மேற்படி செயற்பாட்டினை பூர்த்தி செய்யாத எந்த வீரருக்கும் /வீராங்கனைக்கும் அணியில் இலங்கை யினைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடுவதற்கு, இலங்கையின் பெயரை பாவித்தல் அல்லது இலங்கை நிற இலச்சினையை பயன்படுத்துவதற்கு அல்லது இலங்கை நிற இலச்சினை அணிவதற்கு அனுமதி இருத்தலாகாது.

(8) யாதேனுமொரு விளையாட்டு வீரர்/விளையாட்டு அணி வெளிநாடு ஒன்றிலே பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கும் போது, யாதேனுமொரு வெளிநாட்டுப் போட்டித் தொடருக்கு பங்கேற்கும் பட்சத்தில் அந்த வீரருக்கு அல்லது விளையாட்டு அணிக்கு இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடுவதற்கு, இலங்கையின் பெயர் மற்றும் இலங்கை நிறத்துடன் கூடிய இலச்சினையை பயன்படுத்த முடிவது, குறித்த விளையாட்டுடன் தொடர்புடைய தேசிய சங்கத்தினால் முழு விபரத்துடன் கூடிய அறிக்கை ஒன்றினைத் தயாரித்து குறித்த விளையாட்டு வீரரின் அல்லது அணியின் திறமைகளை அந்த அறிக்கையில் உள்ளடக்கி குறித்த அறிக்கையினை விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பித்து விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்தின் சிபாரிசையும் அதன் பின்னர் விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அனுமதியினைப் பெற்றுக்கொண்டதன் பின்னராகும்.

**விசேட தேவையுள்ளவர்களின் விளையாட்டுக்கள்**

10A. இவற்றிற்கு மேலதிகமாக சகல தேசிய விளையாட்டுக்கள் சங்கத்திற்கும்/ சம்மேளனத்திற்கும் பின்வரும் பணிகள், அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்கள் காணப்படுதல் வேண்டும்.

(1) பெராலிம்பிக் விளையாட்டுக்களுடன் தொடர்புடையதாக விசேட தேவையுள்ள நபர்களை (கற்புலனற்ற, செவிப்புலனற்ற, உடல்சார் அங்கவீனம் போன்ற) உள்ளடக்கிய அனைத்து இணைந்த விளையாட்டுக் கழகங்கள் அங்கவீனர்களின் விளையாட்டுக்கள் தொடர்பான தேசிய சங்கத்தின் (தேசிய பெராலிம்பிக் குழுவின்) இணைந்த விளையாட்டுக் கழகங்களாக உரியவாறு பதிவு செய்தல் வேண்டும் என்பதுடன், அதற்குத் தேவையான வசதிகள் தேசிய பெராலிம்பிக் குழுவினால் ஒழுங்குசெய்து கொடுத்தல் வேண்டும்.

(2) பெராலிம்பிக் விளையாட்டுக்களுடன் தொடர்பற்ற ஏனைய அனைத்து விளையாட்டுக்களுடனும் தொடர்புடைய விசேட தேவையுள்ள நபர்களை (கற்புலனற்ற, செவிப்புலனற்ற, உடல்சார் அங்கவீனம் போன்ற) உள்ளடக்கிய இணைந்த விளையாட்டுக் கழகங்களாக உரிய முறையில் பதிவு செய்துகொள்ளல் வேண்டும் என்பதுடன், அதற்குத் தேவையான வசதிகள் உரிய தேசிய சங்கத்தினால் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

**தேசிய விளையாட்டுச் சங்கங்கள் / சம்மேளனங்களின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தை நடாத்துதல்**

11.

(1) சகல தேசிய சங்கங்களும்/சம்மேளனங்களும் ஒவ்வொரு வருடத்திலும் மே 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் ஆண்டுப் பொதுக் கூட்டத்தை நடாத்துதல் வேண்டும். ஆண்டுப் பொதுக் கூட்டத்தை நடாத்தும் திகதி மற்றும் இடம் பற்றி குறித்த விளையாட்டுடன் தொடர்புடைய சகல துணைச் சங்கங்களை விழிப்பூட்டல் வேண்டும் என்பதுடன் துணைச் சங்கத்தின் செயலாளருக்கு அல்லது தலைவருக்கு, ஆகக் குறைந்தது 14 நாட்களுக்கு முன்னர் முறையான அறிவித்தல் ஒன்றினை செய்தல் வேண்டும்.

(2) சகல தேசிய சங்கங்களும்/சம்மேளனங்களும் ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கு ஆகக் குறைந்தது 14 நாட்களுக்கு முன்னர்,

[i] ஆண்டறிக்கையினையும் ;

[ii] ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கு வருகைத் தந்து வாக்களிக்கும் உரிமை உள்ள இணைந்த நிறுவனங்களின் வாக்காளர் இடாப்பும் ;

[iii] முன்னைய நிதியாண்டிற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கையின் பிரதியொன்று அல்லது கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் பெயரிடப்பட்ட கணக்காய்வு நிறுவனத்தினால் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கையின் பிரதியொன்று ;

[iv] முன்னைய நிதியாண்டிற்குரிய தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளரினால் உறுதிப்படுத்திய கணக்கறிக்கையின் பிரதியொன்று ;

அதன் இணைந்த நிறுவனங்களுக்கு பெற்றுக்கொடுத்தல் வேண்டும்.

(3) தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழுவின் ஊடாக தொழில்நுட்பக் குழுவின், நிதிக் குழுவின் மற்றும் ஒழுக்காற்றுக் குழுவின் உறுப்பினர்கள் இரண்டு (02) வருட காலப் பகுதிக்கு தகைமையின் அடிப்படையில் தேர்ந்தெடுத்தல் ஆண்டுப் பொதுக் கூட்டம் ஒன்றின் போது

மேற்கொள்ளப்படல் வேண்டும். அவ்வாறு நியமித்துக்கொண்டதன் பின்னர் தேர்ந்தெடுத்த குழு தொடர்பான அறிக்கையொன்று விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பித்து அமைச்சின் செயலாளரினால் ஊடாக அனுமதிக்காக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) சகல தேசிய சங்கங்களும்/சம்மேளனங்களும் முன்னைய ஆண்டுடன் தொடர்புடைய கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களுடன் ஆண்டறிக்கை ஒன்றினை தமது ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் போது சபையினரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(5) சந்தர்ப்பத்திற்கேற்ற நிலைகளின் கீழ், முன்னைய ஆண்டின் / ஆண்டுகளின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்று/நிதிக் கூற்றுக்கள் நிறைவேற்றிக்கொள்ள இருப்பின் இவற்றுடன், ஆண்டறிக்கையினை தமது ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் போது சபையினரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(6) சகல தேசிய சங்கங்களும்/சம்மேளனங்களும், ஒவ்வொரு ஆண்டும் ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் பின்னர் ஒரு மாத காலத்தினுள் பின்வரும் ஆவணங்களை பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும்:

[i] அந்த தேசிய விளையாட்டுச் சங்கத்திற்கு / சம்மேளனத்திற்கு தேர்ந்தெடுத்த அனைத்து நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களின் தகவல்கள் ;

[ii] வரவு இடாப்பின் பிரதி ஒன்றுடன் ஆண்டுப் பொதுக்கூட்ட அறிக்கைகளின் உரியவாறு உறுதிப்படுத்திய பிரதியொன்று ;

[iii] ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் சமர்ப்பித்த நிதியாண்டிற்குரிய கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றின் உறுதிப்படுத்திய பிரதியொன்று மற்றும் அந்த கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்று ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதற்கான சாட்சி ;

[iv] விசேட ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் போது தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்தல் குழுவின் உறுப்பினர்களின் பெயர்கள் மற்றும் தொடர்பாடலுக்கான தகவல்கள் ;

[v] போட்டித் தொடர் தொடர்பான நாட்காட்டி மற்றும் திறமைகளை இனங்காணுவதற்கான நிகழ்ச்சித் திட்டம் உள்ளிட்ட தமது யாப்பிலே குறிப்பிடக் கூடிய கால எல்லைகளுக்குரிய அபிவிருத்தித் திட்டம் ;

[vi] அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற நிதி உதவி பற்றிய தகவல்கள் மற்றும் அவை தொடர்பாக கண்காணிப்பதற்கான தேசிய விளையாட்டுச் சங்கத்தின் தொழிற்பாடுகள் பற்றிய ஈராண்டு முன்னேற்ற அறிக்கை.

**தேசிய விளையாட்டுக்கள் சங்கம் / சம்மேளனங்களின் தேர்தல் குழுவின் நடவடிக்கை முறை**

12.

(1)

[i] சகல தேசிய சங்கங்களும் / சம்மேளனங்களும் அங்கத்தவர் தெரிவுக் குழுவின் உறுப்பினர்களை தேர்ந்தெடுத்தல் விசேட ஆண்டுப் பொதுக் கூட்டம் ஒன்றின் ஊடாக மேற்கொள்ளல் வேண்டும். விசேட பொதுச் சபை கூட்டத்தின் போது அங்கத்தவர் தெரிவுக் குழுவினை அறிமுகம் செய்தல் வேண்டும்.

[ii] யாதேனுமொரு அனைத்து தேசிய சங்கம் / சம்மேளனம் அமைச்சரினால் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் ஊடாக கலைத்து அதிகாரம் பெற்ற அலுவலராக விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகம் நியமிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அவரினால் உறுப்பினர் தெரிவுக் குழுவை தேர்ந்தெடுக்க வேண்டியதும், அவ்வாறில்லாத சந்தர்ப்பங்களின் போது குறித்த தேசிய சங்கத்தினால் தேர்தல் குழுவொன்றினை நியமித்துக்கொள்ளல் வேண்டியதும், பின்வரும் அளவுகோள்களின் அடிப்படையிலாகும்.

[iii] சகல தேசிய விளையாட்டுச் சங்கங்களும் / சம்மேளனங்களும் தேர்தல் குழுவை தேர்ந்தெடுக்கும் போது பின்வரும் தேசிய விளையாட்டுச் சங்கங்கள் / சம்மேளனங்களின் வகைப்படுத்தலை கவனத்திற்கொண்டு தமது அங்கத்தவர் தெரிவுக் குழுவை தேர்ந்தெடுத்தல் வேண்டும். (இந்த வகைப்படுத்தல் வெறுமனே நிருவாக தேவைகளுக்காக மாத்திரம் அமைவதுடன், விளையாட்டுக்கள் மற்றும் வீர வீராங்கனைகளுக்கு வகைப்படுத்தலுக்காக பயன்படுத் தலாகாது.) :

(அ) **A தர தேசிய விளையாட்டுச் சங்கங்கள்/சம்மேளனங்கள் :**
உறுப்பினர்கள்/ விளையாட்டுக் கழகங்கள்/ இணைந்த நிறுவனங்கள் 25 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினைக் கொண்ட வருடாந்த புரள்வு 50 மில்லியன் ரூபா அல்லது அதற்கு மேல்

(ஆ) **B தர தேசிய விளையாட்டுச் சங்கங்கள்/சம்மேளனங்கள் :**
உறுப்பினர்கள்/ விளையாட்டுக் கழகங்கள்/ இணைந்த நிறுவனங்கள் 15 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினைக் கொண்ட வருடாந்த புரள்வு 10 மில்லியன் ரூபா அல்லது அதற்கு மேல் எனினும் 50 மில்லியன் ரூபாவிலும் குறைவான

(இ) **C தர தேசிய விளையாட்டுச் சங்கங்கள்/சம்மேளனங்கள் :**
உறுப்பினர்கள்/ விளையாட்டுக் கழகங்கள்/ இணைந்த நிறுவனங்கள் எந்த எண்ணிக்கையினையும் கொண்ட வருடாந்த புரள்வு 10 மில்லியன் ரூபாவிலும் குறைவான

[iv] இக்கட்டளை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படுகின்ற தினத்தில் இருந்து ஒருவார காலப் பகுதியினுள் விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்தினால், அமைச்சரின் கருத்தினை வினவி, விளையாட்டுக்கள் அபிவிருத்தித் திணைக்களத்தில் ஏற்கனவே பதிவு செய்துள்ள அனைத்து தேசிய விளையாட்டுச் சங்கங்கள் பற்றிய மதிப்பீடுகளை கணிப்பீடு செய்து வகைப்படுத்துவதற்காக 05 உறுப்பினர்களுக்கு மேற்படாத குழுவொன்றை நியமித்தல் வேண்டும். மேலே குறிப்பிட்ட குழுவினால் பதிவு செய்துகொண்டுள்ள சங்கங்களின் வகைப்படுத்தல் தொடர்பான பணிகளைப் பூர்த்தி செய்து அதன் சிபாரிசுகளை ஒரு வாரத்திற்குள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

[v] ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கு ஒருமுறையும் அனைத்து தேசிய விளையாட்டுச் சங்கங்கள்/ சம்மேளனங்கள் தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொண்டு வகைப்படுத்தல் செய்வது விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்தினால், அமைச்சரின் கருத்தினை கேட்டறிந்து மேற்கொள்ளல் வேண்டும்.

[vi] அனைத்து தேசிய விளையாட்டுச் சங்கங்களும்/சம்மேளனங்களும் அவற்றின் தேர்தல் குழுவின் தேர்வு பின்வருமாறு அமைதல் வேண்டும்:-

(அ) **A தர தேசிய விளையாட்டுச் சங்கங்கள்/சம்மேளனங்கள் :**
ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற அல்லது மேன்முறையீட்டு நிதிமன்ற நீதிபதிகள் இருவர் மற்றும் குறித்த தேசிய சங்கத்தை அல்லது அதன் இணைந்த விளையாட்டுக் கழகங்கள், ஏனைய இணைந்த அமைப்புகளுக்குள் தொழிற்படு உறுப்பினர் அல்லாத தேர்தல்கள் திணைக்களத்தின் அல்லது தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஓய்வுபெற்ற சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் அல்லது தேர்தல் நடாத்துதல் தொடர்பான அனுபவம் தகைமையுள்ள ஓய்வுபெற்ற நிறைவேற்றுத் தரத்தைச் சேர்ந்த சிரேஷ்ட அரசாங்க அலுவலர் ஒருவர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படுகின்ற பிரதிநிதி ஒருவர்,

(ஆ) **B தர தேசிய விளையாட்டுச் சங்கங்கள்/சம்மேளனங்கள் :**
ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற அல்லது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ஒருவர் மற்றும் குறித்த தேசிய சங்கத்தை அல்லது அதன் இணைந்த விளையாட்டுக் கழகங்கள், ஏனைய இணைந்த அமைப்புகளுக்குள் தொழிற்படு உறுப்பினர் அல்லாத தேர்தல்கள் திணைக்களத்தின் அல்லது தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஓய்வுபெற்ற சிரேஷ்ட அரசாங்க அலுவலர்கள்/ உறுப்பினர் இருவர் அல்லது ஓய்வுபெற்ற நிறைவேற்றுத் தரத்தைச் சேர்ந்த சிரேஷ்ட அரசாங்க அலுவலர் இருவர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படுகின்ற பிரதிநிதி ஒருவர்,

**(இ) C தர தேசிய விளையாட்டுச் சங்கங்கள்/சம்மேளனங்கள் :**
குறித்த தேசிய சங்கம் அல்லது அதன் இணைந்த விளையாட்டுக் கழகங்கள், ஏனைய இணைந்த அமைப்புகளுக்குள் தொழிற்படு உறுப்பினர் அல்லாத தேர்தல் நடாத்துதல் தொடர்பான அனுபவமுள்ள ஓய்வுபெற்ற சிரேஷ்ட அரசாங்க நிறைவேற்றுத் தரத்தைச் சேர்ந்த அலுவலர்கள் மூவர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படுகின்ற பிரதிநிதி ஒருவர்,

ஆகியோரை உள்ளடக்கிய குழுவொன்றாக இருத்தல் வேண்டும்.

(2) விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்தப்படுகின்ற தேர்தலின் போது அல்லது தேசிய விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்படுகின்ற தேர்தல் ஒன்றின் போது குறித்த விளையாட்டுடன் தொடர்புடைய துணைச் சங்கங்களுக்கு, தேர்தல் குழுவின் உறுப்பினர்களை தெரிவு செய்து கொள்வதற்காக **விசேட பொதுக் கூட்டமொன்றினை** நடாத்துவதாக குறித்த துணைச் சங்கத்தின் செயலாளருக்கு அல்லது தலைவருக்கு, 14 நாட்களுக்கு முன்னர் அறிவித்தல் வேண்டும்.

(3) விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்தப்படுகின்ற தேர்தல் ஒன்றின் போதாயின் விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்தினாலும், தேசிய விளையாட்டுச் சங்கம் ஒன்றினால் நடாத்தப்படுகின்ற தேர்தல் ஒன்றின் போதாயின் தேசிய விளையாட்டுக்கள் சங்கத்தினாலும், **விசேட பொதுக் கூட்டத்திற்கு முன்னர்** அனைத்து துணைச் சங்கங்களிடமிருந்து பின்வரும் ஆவணங்களை பெற்றுக்கொண்டு பரீட்சித்துப் பார்த்து, தமது தேசிய சங்க யாப்பின் நடவடிக்கை முறைகளையும் கவனத்திற்கொண்டு ஆண்டு பொதுக் கூட்டத்தின் போது வாக்குரிமை உள்ள மற்றும் இல்லாத துணைச் சங்கங்கள் என்ன என்பது பற்றிய முழுமையான அறிக்கையொன்று விசேட பொதுக் கூட்டம் நடாத்தப்படுகின்ற தினத்தன்று தேர்தல் குழுவிடம் பெற்றுக்கொடுத்தல் வேண்டும் :

[i] குறித்த துணைச் சங்கத்தின் யாப்பு ;
[ii] குறித்த துணைச் சங்கத்தின் இறுதியாக நடாத்தப்பட்ட பொதுக் கூட்ட அறிக்கை மற்றும் பொதுச் சபை கூட்டத்தில் பங்கேற்ற உறுப்பினர்களின் கையொப்ப ஆவணத்துடன் பெயர்ப் பட்டியல் ;
[iii] குறித்த துணைச் சங்கத்தினால் தேசிய சங்கத்திற்கு இறுதியாக வருடாந்த பங்களிப்பினைப் பெற்றுக்கொள்வதற்காக பணம் செலுத்திய பற்றுச்சீட்டு அல்லது வங்கிக்கு பணம் செலுத்திய உறுதிச்சீட்டு ;
[iv] குறித்த துணைச் சங்கத்தின் இறுதியாக சமர்ப்பித்த கணக்கு அறிக்கை;
[v] குறித்த துணைச் சங்கத்தின் இறுதியாக நியமிக்கப்பட்ட நிறைவேற்றுக் குழுவின் அலுவலர்களின் பெயர்ப் பட்டியல், தேசிய அடையாள அட்டை இலக்கம், முகவரி, மின்னஞ்சல், தொலைபேசி இலக்கம் ;
[vi] குறித்த துணைச் சங்கத்தின் செயற்பாடுகள் (போட்டிகளில் பங்கேற்பு/பயிற்சி முகாம்கள்/ செயலமர்வுகள்).

(மேலே குறிப்பிட்ட அனைத்து ஆவணங்களும் துணைச் சங்கத்தின் தலைவர் மற்றும் செயலாளரினால் உண்மையென உறுதிப்படுத்தி கையொப்பமிட்டு பதவி இலச்சினையை வைத்தல் வேண்டும்.)

(4) குறித்த துணைச் சங்கங்களுக்கு வாக்குரிமை உள்ளதாக/இல்லையென தீர்மானிக்கும் போது இதற்கு மேலதிகமாக பின்வரும் விடயங்களையம் கவனத்திற் கொள்ளல் வேண்டும்:

[i] வருடாந்த அங்கத்துவப் பணம் உரிய தினத்தில் செலுத்தியிருத்தல் வேண்டும்.
[ii] குறித்த தேசிய சங்கத்தில் / சம்மேளனத்தில் பதிவு செய்து அங்கத்துவத்தினைப் பெற்றுக்கொண்டு ஆகக் குறைந்தது இரண்டு வருடங்கள் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
[iii] தேசிய விளையாட்டுச் சங்கத்தினால் வருடாந்தம் ஒழுங்கு செய்யப்படுகின்ற தேசிய போட்டித் தொடர் உட்பட ஆகக் குறைந்தது வருடாந்தம் நடைபெறுகின்ற விளையாட்டுப் போட்டித் தொடர்கள் இரண்டிற்கு வீரர்கள்/ விளையாட்டு அணிகள் பங்கேற்கச் செய்திருத்தல் வேண்டும்.
[iv] பயிற்சி முகாம்கள் மற்றும் பயிற்சி பாடநெறிகள் ஆண்டு காலப் பகுதியினுள் தொடர்ச்சியாக நடாத்தியிருத்தல் வேண்டும்.

*(5)*

[i] தேர்தல் குழுவினால் விசேட பொதுக் கூட்டத்தின் போது குறித்த துணைச் சங்கங்களுக்கு வாக்குரிமை உள்ளதாக/இல்லையென பகிரங்கப்படுத்தல் வேண்டும்.

[ii] அவ்வாறு அறிவித்ததன் பின்னர் தேர்தல் குழுவினால் யாதேனுமொரு இணைச் சங்கத்தின் வாக்குரிமை உள்ளமை/இல்லாமை சம்பந்தமான அனைத்து எதிர்ப்புக்களையும் மேற்குறிப்பிட்ட வாக்குரிமை உள்ளமை/இல்லாமை பற்றி பகிரங்கப்படுத்திய தினத்திலிருந்து 02 தினங்களுக்குள் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

[iii] தேர்தல் குழுவினால் மேற்குறிப்பிட்ட எதிர்ப்புக்களைப் பரீட்சித்துப் பார்த்து மேற்குறிப்பிட்ட வாக்குரிமை உள்ளமை/இல்லாமை பற்றிய எதிர்ப்புக்களை ஏற்றுக்கொள்ளல் நிறைவுற்ற தினத்தில் இருந்து 05 நாட்களுக்குள் இறுதி வாக்குரிமை உள்ள துணைச் சங்கத்தின் பெயர் பட்டியல் தேசிய விளையாட்டுக்கள் சங்கத்தினால் அனைத்து துணைச் சங்கங்களுக்கும் அறிவித்தல் வேண்டும்.

[iv] தேர்தல் குழுவினால் இறுதி வாக்குரிமை உள்ள இறுதி துணைச் சங்கங்களின் பெயர்ப் பட்டியலை இறுதி பகிரங்கப்படுத்தலின் பின்னர் தேர்தலுடன் தொடர்புடைய வேட்பு மனுக்களை கோருதல் தொடர்பான அறிவித்தல் வெளியிடுதல் வேண்டும்.

*(6)* தேர்தல் குழுவினால் யாதேனுமொரு தேர்தலுடன் தொடர்புடையதாக வேட்பு மனுக்களை கோருவதற்காக அறிவித்தல் வெளியிட்ட தினத்தில் இருந்து வேட்பு மனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி தினத்திற்கு இடையில் 07 நாட்களுக்கு மேற்படாத காலப் பகுதியை கொண்டிருத்தல் வேண்டும்.

*(7)* தேர்தல் குழுவினால் வேட்பு மனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி தினத்தன்று அனைத்துத் தரப்பினர்கள் முன்னிலையிலும் வேட்பு மனுக்களைத் திறத்தல் வேண்டும்.

*(8)* வேட்பு மனுக்களுடன் தொடர்புடைய அனைத்து எதிர்ப்புக்களும் வேட்பு மனுக்களை ஏற்றுக்கொள்ளும் பணி முடிவடைந்த தினத்திலிருந்து 03 நாட்களுக்குள் தேர்தல் குழுவிடம் பெற்றுக்கொடுத்தல் வேண்டும்.

*(9)* தேர்தல்கள் குழுவினால் எதிர்ப்புக்களை சமர்ப்பித்தவர்கள் மற்றும் எதிர்ப்புக்கு உள்ளானவர்கள் ஆகியோர் முன்னிலையில் குறித்த எதிர்ப்புக்களைப் பரீட்சித்து வேட்பு மனுக்களுடன் தொடர்புடைய அனைத்து எதிர்ப்புக்களையும் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த தினத்திலிருந்து 03 நாட்களுக்குள் குறித்த எதிர்ப்புக்கள் தொடர்பான தீர்ப்பினைப் பெற்றுக்கொடுத்தல் வேண்டும்.

*(10)* மேலே குறிப்பிட்ட எதிர்ப்புக்களுடன் தொடர்புடைய தேர்தல் குழுவின் தீர்மானம் தொடர்பாக பாதிக்கப்படுகின்ற எந்தவொரு தரப்பும் குறித்த தீர்ப்பு வழங்கப்பட்ட தினத்திலிருந்து 03 வேலை நாட்களுக்குள் பணம் செலுத்தி மேன்முறையீடு ஒன்றினை மேன்முறையீட்டு ஆலோசனைக் குழுவிடம் ஒப்படைக்க முடியும்.

*(11)* மேன்முறையீடு தொடர்பான தீர்மானத்தை 10 வேலை நாட்களுக்குள் மேன்முறையீட்டு ஆலோசனைக் குழுவினால் வெளியிடுதல் வேண்டும்.

*(12)* அதன் பின்னர் தேர்தல்கள் குழுவினால் இறுதி வேட்பு மனுக்களின் ஆவணத்தை தேசிய சங்கத்தினால் துணைச் சங்கங்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தேசிய சங்கத்தினால் அனைத்து துணைச் சங்கங்களுக்கும், ஆகக் குறைந்தது 14 நாட்களுக்கு முன்னர் அறிவித்தல் ஒன்றினை விடுத்து ஆண்டு பொதுக் கூட்டத்திலே தேர்தலை நடாத்துதல் வேண்டும்.

## பகுதி IV

### தேசிய விளையாட்டுக்கள் சங்கத்தின் / சம்மேளனத்தின் தீர்மானங்கள் அல்லது நடவடிக்கைகளுக்கு எதிராக மேன்முறையீடு செய்யும் நடவடிக்கை முறை மேன்முறையீட்டு ஆலோசனைக் குழு

*13.*

*(1)* விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் 05 உறுப்பினர்களைக் கொண்ட மேன்முறையீட்டு ஆலோசனைக் குழுவொன்றை நியமித்தல் வேண்டும். மேன்முறையீட்டு ஆலோசனைக் குழுவொன்றின் உறுப்பினர்கள் நான்கு (04) வருட காலத்திற்கு பதவி வகிப்பதுடன் மேலும் நான்கு (04)

வருட காலத்திற்கு மீண்டும் நியமிப்பதற்கு தகைமை பெறுவர். எந்தவொரு நபரும் மேன்முறையீட்டு ஆலோசனைக் குழுவின் உறுப்பினராக எட்டு (08) வருடங்களுக்கு மேல் பதவி வகிக்க முடியாது.

(2) அமைச்சரினால் மேன்முறையீட்டு ஆலோசனைக் குழுவொன்றுக்கு செயலாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும். அந்தச் செயலாளர் நான்கு (04) வருட காலத்திற்கு பதவி வகிப்பதுடன் மேலும் நான்கு (04) வருட காலத்திற்கு மீண்டும் நியமிப்பதற்கு தகைமை பெறுவர். எந்தவொரு நபரும் மேன்முறையீட்டு ஆலோசனைக் குழுவின் செயலாளராக எட்டு (08) வருடங்களுக்கு மேல் பதவி வகிக்க முடியாது.

(3) மேன்முறையீட்டு ஆலோசனைக் குழு உறுப்பினர்களின் மற்றும் மேன்முறையீட்டு ஆலோசனைக் குழுவின் செயலாளரின் வேதனமானது விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரின் கருத்தினை கேட்டறிந்து தீர்மானித்து தேசிய விளையாட்டுக்கள் நிதியத்திலிருந்து செலுத்துதல் வேண்டும்.

(4) தேசிய விளையாட்டுக்கள் சங்கம் ஒன்றின் / சம்மேளனம் ஒன்றின் தீர்மானமொன்று மற்றும்/அல்லது வேறு யாதேனுமொரு விடயம், தேர்தல் குழுவொன்றின் தீர்மானமொன்று, தேசிய ஒலிம்பிக் குழுவின் தீர்மானமொன்று தொடர்பில் பாதிக்கப்பட்ட எந்தவொரு நபருக்கும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரின் ஊடாக மேன்முறையீட்டு ஆலோசனைக் குழுவிடம் மேன்முறையீடு ஒன்றினை சமர்ப்பிக்க முடியும். மேன்முறையீட்டு ஆலோசனைக் குழுவிடம் செய்யப்படுகின்ற எந்தவொரு மேன்முறையீடும் விளையாட்டுச் சட்டத்தின் 30 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைச்சரிடம் செய்யப்படுகின்ற மேன்முறையீடு ஒன்றிற்கு சமமான தாக்கமொன்றை ஏற்படுத்துகின்றது.

(5) குறித்த மேன்முறையீட்டினை உறுதிப்படுத்துவதற்காக உரிய அனைத்து சாட்சிகள் மற்றும் ஏனைய தேவையான விடயங்களையும் அமைச்சின் காசாளரிடம் செலுத்திய இலங்கையின் செல்லுபடியான தொகையில் இருபத்தையாயிரம் ரூபா (ரூ. 25,000.00) பெறுமதியான மீளச் செலுத்தாத தொகையினை செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் மூலப் பிரதியையும் அந்த மேன்முறையீட்டுடன் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளருக்கு நான்கு (04) பிரதிகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும். மேன்முறையீட்டிற்காக செலுத்தப்படுகின்ற அனைத்துத் தொகையும் தேசிய விளையாட்டு நிதியத்தில் வரவு வைத்தல் வேண்டும். அவரது விளையாட்டு வீரர் தெரிவு அல்லது விளையாட்டு வீரர்களுக்கான கொடுப்பனவு தொடர்பாக வீரர் ஒருவரினால் செய்யப்படுகின்ற எந்தவொரு மேன்முறையீடும் எந்தவொரு கொடுப்பனவினையும் செலுத்துவதன் மூலம் விடுவித்தல் வேண்டும்.

(6) விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரினால் உரியவாறு பூர்த்தி செய்த மேன்முறையீடுகள் 07 நாட்களுக்குள் மேன்முறையீட்டு ஆலோசனைக் குழுவின் செயலாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். மேன்முறையீட்டு ஆலோசனைக் குழுவின் செயலாளர் பதவியில் வெற்றிடமொன்று நிலவும் பட்சத்தில், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரினால் அந்த மேன்முறையீட்டினை மேன்முறையீட்டு ஆலோசனைக் குழுவிடம் நேரடியாக ஒப்படைத்தல் வேண்டும்.

(1) மேன்முறையீட்டு ஆலோசனைக் குழுவினால் தமக்குப் பொருத்தமானதென திருப்தியடையும் வகையில் மேலதிகத் தகவல்கள் கோர முடியும். அந்த மேன்முறையீடுகள் கிடைக்கப் பெற்று 14 நாட்களுக்குள் அந்த மேன்முறையீடுகள் தொடர்பான சிபாரிசுகள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரின் ஊடாக விளையாட்டுத்துறை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அவர்கள் மேன்முறையீட்டு ஆலோசனைக் குழுவின் சிபாரிசுகளைக் கவனத்திற் கொண்டு அந்த மேன்முறையீடுகள் தொடர்பான தீர்மானம் அறிவிக்கப்படுவதுடன், அந்த மேன்முறையீடு தொடர்பாக அமைச்சர் அவர்களின் தீர்மானம் விளையாட்டுச் சட்டத்தின் 30 ஆவது பிரிவின் பிரகாரம் இறுதியானதும் தீர்க்கமானதுமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அது யாதேனுமொரு நீதிமன்றில் கேள்வி எழுப்பலாகாது.

## பகுதி V

### தேசிய விளையாட்டுக்கள் சங்கங்கள்/சம்மேளனங்கள் பொது நடவடிக்கை முறைகள்

14.

(1) விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்தினால் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் அமைச்சில் பதிவு செய்துள்ள தேசிய விளையாட்டுச் சங்கங்கள்/சம்மேளனங்கள் பற்றிய ஆவணம் ஒன்றினை

பேணி வருதல் வேண்டும். அந்த ஆவணம் இங்கு அட்டவணை 1 இல் குறிப்பிட்டுள்ள "இ" மாதிரிக்கு ஏற்ப அமைதல் வேண்டும். அதற்கு மேலதிகமாக சகல தேசிய விளையாட்டுச் சங்கமொன்றுக்கு/ சம்மேளனம் ஒன்றுக்குரிய இதன் பகுதி I இல் குறிப்பிட்டுள்ள தகவல்கள் அடங்கிய டிஜிட்டல் தரவு முறைமையொன்றினை விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்தினால் பேணி வருதல் வேண்டும்.

(2) சகல தேசிய விளையாட்டுச் சங்கங்கள்/சம்மேளனங்களும் அந்த விளையாட்டுச் சங்கத்தின் யாப்பினால் தீர்மானிக்கக் கூடிய குறித்த விளையாட்டுடன் தொடர்புடைய இணைந்த நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள் அல்லது பிற அமைப்புக்களை உள்ளடக்கி இருத்தல் வேண்டும். அந்த இணைந்த விளையாட்டுச் சங்கம்/சம்மேளனம் இணைந்த நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள் அல்லது பிற அமைப்புக்களின் தொழிற்பாட்டு அங்கத்தவர்களைக் கொண்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், போட்டி ஏற்பாடுகள் மற்றும் தொழில்நுட்ப செயற்பாடுகள் என்பவற்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) சகல தேசிய விளையாட்டுச் சங்கமொன்றும்/சம்மேளனம் ஒன்றும் நிறைவேற்றுக் குழுவினால் உறுதிப்படுத்திய நிதிக் கூற்றுக்களை ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்து இரண்டு மாதங்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) பொதுக் கூட்டத்தை நடாத்துவதற்கு முன்னர் ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் கணக்காய்வு செய்வதற்காக நிதியாண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் சமர்ப்பித்துள்ள போதிலும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றொன்று தேர்தல் தினத்திற்கு 14 நாட்களுக்கு முன்னர் தமது அங்கத்தவர்களுக்கு அனுப்பி வைப்பதற்கு கணக்காய்வு முடிவடைந்து கிடைக்கப் பெறாத பட்சத்தில், தேர்தல் மற்றும் பொதுக் கூட்டம் என்பன கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்று ஒன்றினை சமர்ப்பிக்காது நடாத்த முடியும் என்பதுடன், கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை சம்மேளனத்திற்கு பெற்றுத்தந்த உடனேயே அந்த கணக்காய்வு அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்கள் என்பவற்றிற்கு பொறுப்புக்கூற வேண்டிய, நிதியாண்டின் குறித்த தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் உறுதிப்படுத்தி விசேட பொதுக் கூட்டத்திற்கு 14 நாட்களுக்கு முன்னர் தற்போதைய நிறைவேற்றுக் குழுவினால் குறித்த இணைந்த நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்து குறித்த நிதியாண்டின் குறித்த தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரும் நடப்பு நிறைவேற்றுக் குழுவும் பங்கேற்கும் விசேட பொதுக் கூட்டம் ஒன்றிலே நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(5) தேசிய விளையாட்டுச் சங்கம் ஒன்றின்/சம்மேளனம் ஒன்றின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் ஒருவர் யாதேனுமொரு விதத்தில் நேரடியாக அல்லது மறைமுகமாக யாதேனுமொரு பெறுகை தொடர்பாக பொறுப்பொன்று உள்ளதாக வெளிவரும் பட்சத்தில் நடைமுறைகளை மீறியமை தொடர்பில் விசாரணை செய்வதற்காக விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு. நிறைவேற்றுக் குழு உறுப்பினர் ஒருவர் இந்த நடைமுறைகளை மீறுவதாக திருப்தியாக கண்டறிந்ததன் பின்னர் விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்தினால் தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/சம்மேளனத்தின் குறித்த அலுவலருக்கு எதிராக பின்வரும் விதத்தில் உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்:

(i) குறித்த அலுவலரை உரிய தேசிய சங்கத்திலிருந்து/ சம்மேளனத்திலிருந்து அகற்றுதல், அந்த அலுவலர் குறித்த தேசிய சங்கம்/சம்மேளனம் என்பவற்றின் அனைத்து குழுக்களிலிருந்தும் அகற்றுதல் ;

(ii) அவ்வாறான அலுவலர் ஒருவர் மூன்று (3) வருடங்களுக்கு குறையாத மற்றும் ஐந்து (5) வருடங்களுக்கு மேற்படாத காலத்திற்கு எந்தவொரு தேசிய விளையாட்டுக்கள் சங்கத்திலும்/ சம்மேளனத்திலும் பதவி வகிப்பதற்கு தடை விதித்தல்.

(iii) விளையாட்டுக்கள் சட்டத்தின் பிரகாரம் மிகவும் பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு விளையாட்டுத்துறை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு பரிந்துரை ஒன்றினை செய்தல்.

(6) யாதேனுதொரு நபருக்கு தேசிய விளையாட்டுக்கள் சங்கம்/ சம்மேளனம் ஒன்றிற்கு மேற்பட்ட ஒரு குறித்த காலப் பகுதியினுள் நிறைவேற்றுக் குழுவில் அங்கம் வகிக்க முடியாது.

(7) யாதேனுமொரு தேசிய சம்மேளனத்தில் / சங்கத்தில் அல்லது யாதேனுமொரு இணைந்த விளையாட்டுக் கழகம்/ சங்கம் தொடர்பான குற்றம் தொடர்பாக இந்நாட்டு குற்றவியல் நீதிமன்றம் ஒன்றிடம் அறிக்கையிட்டு

ஆரம்ப கட்ட விசாரணைகளின் பின்னர் நிதி தூய்மைப்படுத்தல், இலஞ்சம் அல்லது ஊழல் மற்றும் அதை அண்டிய குற்றவியல் தண்டனை மற்றும்/அல்லது தண்டனைச் சட்டக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள யாதேனுமொரு குற்றம் தொடர்பாக குற்றப் பத்திரம்/குற்றப் பகர்வுப் பத்திரம் ஒன்றினை தாக்கல் செய்துள்ள பட்சத்தில் குறித்த நபர்/நபர்கள் நிறைவேற்றுக் குழுவில் வகிக்கும் பதவியை உடனடியாக விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்தினால் இடைநிறுத்துதல் வேண்டும். அந்த இடைநிறுத்தம், குறித்த குற்றச்சாட்டு தொடர்பான வழக்கு விசாரணை முடிவுற்று இறுதித் தீர்ப்பு வழங்கும் வரையில் அமுலில் இருக்கும்.

(8) தேசிய விளையாட்டுக்கள் சங்கம், சர்வதேச ஒப்பந்தங்களில் மற்றும் சர்வதேச நிதிக் கொடுக்கல் வாங்கல்களில் ஒப்பந்தம் செய்துகொள்ளும் போது நாட்டின் நிதிச் சட்டத்தின் கீழ் நிதி ஒழுக்கத்துடன் வெளிப்படையான தன்மையுடன் செயற்பட வேண்டும் என்பதுடன், அவ்வாறான ஒப்பந்தங்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பிரதான கணக்கீட்டு அலுவலர் என்ற வகையில் அமைச்சின் செயலாளரின் பூரண பரிந்துரையின் கீழ் விளையாட்டுக்கள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அனுமதிக்காக சமர்ப்பித்தல் வேண்டும்.

(9) யாதேனுமொரு தேசிய சங்கத்திற்கு/சம்மேளனத்திற்கு அந்த விளையாட்டின் தன்மை மற்றும் சந்தர்ப்பத்திற்கு உகந்த நிலைகளின் கீழ் இந்தக் கட்டளைகளுடன் இசைவுறுவதற்கு இயலாத சந்தர்ப்பம் ஒன்றின் போது, அமைச்சின் செயலாளரிடம் விடுக்கும் கோரிக்கை ஒன்றின் ஊடாக செயலாளரின் சிபாரிசின் மீது அமைச்சரின் அனுமதியை பெற்றுக்கொண்டதன் பின்னர் இந்த கட்டளைத் தொடர்பாக விடுவிப்பு ஒன்றினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

(10) சகல தேசிய சங்கங்களும்/சம்மேளனங்களும் பொதுக் கூட்டம்/விசேட பொதுக் கூட்டத்திற்கு விளையாட்டுக் கள் பணிப்பாளர் நாயகம் அல்லது அவரது அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவர் பங்கேற்றல் வேண்டும்.

(11) வேறொரு நாட்டின் பிரசையாக இலங்கைப் பிரசை ஒருவர் யாதேனுமொரு தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழுவொன்றின் உறுப்பினர் ஒருவராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு வேட்பு மனு கோரப்படும் தினத்திற்கு முன்னர் 02 வருட காலப் பகுதியினுள் பதிவு செய்த வரி செலுத்தும் ஒருவராக இருத்தல் வேண்டும்.

(12) சகல தேசிய விளையாட்டுச் சங்கங்களும்/சம்மேளனங்களும் அதன் தேசிய விளையாட்டுக்கள் சங்கத்தின்/சம்மேளனத்தின் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டவர்களினால் அல்லது அதன் தேசிய சங்கத்தினால்/சம்மேளனத்தினால் நிறுவப்பட்ட உரிய அதிகாரமளிக்கப்பட சபையொன்று அல்லது முறையான குழுவொன்றினால் யாதேனுமொரு விளையாட்டு வீரர்/இணைந்த விளையாட்டுச் சங்கமொன்று அல்லது அதன் தேசிய விளையாட்டுச் சங்கத்துடன் ஒப்பந்தமொன்றுள்ள வேறு யாதேனுமொரு நபர் அல்லது அமைப்புடன் தொடர்புடைய தண்டனையொன்று, தடையொன்று, இடைநிறுத்தமொன்று அல்லது இரத்துச் செய்தலொன்றுக்காக விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(13) இந்நாட்டின் அரச இலச்சினை மற்றும்/அல்லது தேசியக் கொடியை யாதேனுமொரு கடிதத் தலைப்பில் அல்லது சான்றிதழ் ஒன்றில் அச்சிட்டு யாதேனுமொரு விளையாட்டுக்காக பிரசித்திப்படுத்துவதற்கு விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் அல்லது கல்வி அமைச்சின் கீழுள்ள அரச நிறுவனம் ஒன்றினால் மாத்திரமே முடியும். ஏனைய அனைத்து தேசிய விளையாட்டுச் சங்கங்களும்/ சம்மேளனங்களும் பயன்படுத்துகின்ற கடிதத் தலைப்பில் மற்றும் சான்றிதழ்களில் குறித்த சங்கத்தின் அல்லது சம்மேளனத்தின் இலச்சினையை மாத்திரமே பதிக்க முடியும்.

(14) தேசிய விளையாட்டுக்கள் சங்கமொன்று/சம்மேளனமொன்று தேசிய அல்லது இலங்கை என்ற பெயர் நாமத்தை பயன்படுத்தும் போது இந்த ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய விளையாட்டுக்கள் சங்கமொன்றை, சம்மேளனமொன்றை பதிவு செய்வதற்கான செயற்பாட்டினை உரியவாறு பூர்த்தி செய்ததன் பின்னராகும். அவ்வாறு உரியவாறு பதிவு செய்யாத தேசிய விளையாட்டுக்கள் சங்கமொன்று/சம்மேளனமொன்று மற்றும்/அல்லது இணைந்த விளையாட்டுச் சங்கமொன்று/சம்மேளனமொன்று மற்றும்/அல்லது இணைந்த வேறு யாதேனுமொரு அமைப்பு தேசிய அல்லது இலங்கை என்ற நாமத்தை பயன்படுத்துவதானது இந்த ஒழுங்கு விதிகள் மீறும் ஒரு செயலாகவே கருதுதல் வேண்டும்.

(15) சகல தேசிய விளையாட்டுக்கள் சங்கங்களும்/சம்மேளனங்களும் தமது யாப்பிற்குள் தமது தேசிய விளையாட்டுக்கள் சங்கத்திற்கு/சம்மேளனத்திற்கு இணைந்த விளையாட்டுச் சங்கங்களின் தேர்தலின் போது வாக்குரிமை இருத்தல் அல்லது இல்லாதிருத்தல் தொடர்பாக பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்/தகைமையின்மை தொடர்பான விதிமுறைகளை உள்ளடக்குதல் வேண்டும்.

(16) சகல தேசிய விளையாட்டுக்கள் சங்கங்கள்/சம்மேளனங்களினால் வெளித்தரப்பினரிடம் இருந்து கிடைக்கப் பெறுகின்ற அனைத்து விதமான நிதி அனுசரணைகள், நிதியுதவி, நிதிசார் மற்றும் பொருள்சார் அன்பளிப்புக்கள்/கொடைகள் மற்றும் வேறு விதத்தில் கிடைக்கப் பெறுகின்ற யாதேனுமொரு அசைவுறா மற்றும் அசைவுறும் சொத்துக்கள் தொடர்பான அறிக்கையொன்றை ஒவ்வொரு ஆறு (06) மாதங்களுக்கு ஒருமுறையும் விளையாட்டுக்கள் அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் பெற்றுக்கொடுத்தல் வேண்டும்.

(17) சகல தேசிய விளையாட்டுக்கள் சங்கமொன்று/சம்மேளனமொன்று மற்றும் அவற்றின் தேசிய தெரிவுக் குழுவினால் வீரர்கள்/வீராங்கனைகள், பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் அலுவலர்கள் வெளிநாட்டுப் போட்டித் தொடர், வெளிநாட்டுப் பயிற்சிகள் அல்லது பிற விளையாட்டுடன் தொடர்புடைய நிகழ்ச்சித் திட்டம் ஒன்றுகாக பங்கேற்கச் செய்யும் போது எந்தவிதத்திலும் அந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு அத்தியாவசியமல்லாத எந்தவொரு நபரையும் அதில் பங்கேற்கச் செய்யுமாறு விளையாட்டுக்கள் அபிவிருத்தித் திணைக்களத்திடம் பரிந்துரை செய்தலாகாது.

(18) சகல தேசிய விளையாட்டுக்களுடன் தொடர்புடைய வீரர்கள்/வீராங்கனைகளுடன் தொடர்புடைய தெரிவுச் செயற்பாடுகள், பயிற்றுவிப்பாளர்கள், உதவி பதவியணி ஆகியோரை தெரிவு செய்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய விளைவாந்தன்மையான விடயங்கள் தொடர்பாக வெளிப்படையான தன்மையினை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் அந்த விடயங்கள் தொடர்பாக முன்வைக்கப்படுகின்ற முறைப்பாடுகளை விசாரணை செய்து அது தொடர்பாக விளையாட்டுத்துறை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரிடம் பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்கு தேசிய விளையாட்டுக்கள் தெரிவுக் குழுவிற்கு அதிகாரம் உண்டு.

(19) சகல தேசிய விளையாட்டுக்கள் சங்கமொன்றும்/சம்மேளனமொன்றும் குறித்த விளையாட்டில் ஈடுபட்டுள்ள இணைந்த நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்களை பதிவு செய்தல் மற்றும் இதன் I ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஈ மாதிரிப் படிவத்திற்கேற்ப அமைய வேண்டிய ஆவணம் ஒன்றினை பேணிவருதல் மற்றும் அந்த இணைந்த நிறுவனத்திற்கு, விளையாட்டுக் கழகத்திற்கு அல்லது ஏனைய அமைப்புக்களுக்கு பதிவுச் சான்றிதழ் ஒன்றினை வழங்குதல் வேண்டும்.

(20) சகல தேசிய விளையாட்டுக்கள் சங்கமொன்றும்/தேசிய சம்மேளனமொன்றும் விளையாட்டுக்கள் சங்கத்தின்/சம்மேளனத்தின் வலய விளையாட்டுக் கழகங்கள் முதல் மாவட்ட விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் மாகாண விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் ஏனைய பிரதான அங்கத்துவ விளையாட்டுக் கழகங்களின் கண்காணிப்பு மற்றும் ஒழுங்குபடுத்தல் என்பன மேற்கொள்ளல் வேண்டும். அவ்வாறே மாவட்ட விளையாட்டுச் சங்கம் தமது அதிகாரப் பிரதேசத்தினுள் குறித்த விளையாட்டினை மேம்படுத்துகின்றனவா, வருடாந்தம் வலய போட்டித் தொடர்கள் 02 இற்கு குறையாதவாறு நடாத்துகின்றனவா, வீரர்கள்/வீராங்கனைகள் பயிற்றுவிக்கப்படுகின்றனரா, நிரந்தர விளையாட்டு குழுவொன்று பராமரிக்கப்படுகின்றனவா என்பது பற்றியும் மற்றும் மாவட்டச் சங்கத்தினால் உள்ளூர் விளையாட்டுக் கழகங்களை முறையாக கண்காணித்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் என்பன செய்யப்படுகின்றனவா என்பதனை தேடிப் பார்த்தல் மற்றும் விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிடல் என்பன மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(21) அனைத்து தேசிய விளையாட்டுச் சங்கங்களும் சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளும் வகையில் ஒழுக்காற்று ஒழுங்கு விதிகளைத் தயாரித்துக்கொள்ளல் வேண்டும். மேலும் யாதேனும் ஒருவர் ஏதேனுமொரு விதத்தில் யாதேனுமொரு குற்றத்தைப் புரியும் பட்சத்தில் (தொழில்நுட்ப, போட்டி அல்லது நிதி) அதற்கு எதிராக மேற்கொள்ளக் கூடிய சட்ட நடவடிக்கைகள் இதில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். அதன் பின்னர் இந்த ஒழுங்கு விதிகள் குறித்த சங்கத்தின் நிறைவேற்றுக் குழுவின் மற்றும் ஆண்டு பொதுக் கூட்டத்தில் அல்லது விசேட பொதுக் கூட்டத்தில் அனுமதிக்கப்பட்டு அதன் பின்னர் விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பித்து அனுமதியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். இந்த ஒழுங்கு விதிகள் விளையாட்டுக்கள் சட்டத்தின் குறித்த ஒழுங்கு விதிகளுக்கு மற்றும் சம்பந்தப்பட்ட சர்வதேச தாய் சங்கங்களின் ஒழுங்கு விதிகளுக்குக் கீழ் தயாரித்துக்கொள்ளல் வேண்டும்.

(22) அனைத்து தேசிய விளையாட்டுச் சங்கங்களும்/சம்மேளனங்களும் விளையாட்டுக் கழகங்கள், நிறுவனங்கள், மாவட்ட விளையாட்டுச் சங்கங்கள், மாகாண விளையாட்டுச் சங்கங்கள் அல்லது மாவட்ட விளையாட்டுச் சங்கங்களுடன் இணைந்த விளையாட்டுக் கழகங்கள் மற்றும் அங்கத்துவ அமைப்புக்களின் தேர்தல் உட்பட அனைத்து செயற்பாடுகள் தொடர்பான விபரங்களும் விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(23) யாதேனுமொரு தேசிய விளையாட்டுக்கள் சங்கத்தின்/ சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினராவதற்கு வேட்பு மனு தாக்கல் செய்யும் சந்தர்ப்பத்தில் அனைத்து நபர்களும் அந்த ஆண்டின் மாச்சு 31 ஆம் திகதியன்று தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய ஆவணம் ஒன்றினை தேர்தல் குழுவிடம் பெற்றுக்கொடுத்தல் வேண்டும். அவ்வாறு ஒப்படைப்பதற்குத் தவறும் மற்றும்/ அல்லது புறக்கணிக்கும் நபர் ஒருவர் தேசிய விளையாட்டுக்கள் சங்கம் ஒன்றில்/ சம்மேளனம் ஒன்றில் எந்தவொரு பதவிக்கும் தேர்ந்தெடுப்பதற்கு தகுதியற்றவராக காணப்படுவார். அந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆவணம் தேர்தல் பணிகள் முடிவடைந்து 05 வேலை நாட்களுக்குள் குறித்த தேர்தல் குழுவினால் விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்திடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(24) இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாட்டுக்களில் பங்கேற்கும் வீரர்கள்/வீராங்கனைகள், முகாமையாளர்கள் மற்றும் ஏனைய அலுவலர்கள் இலங்கையினுள் அல்லது வெளிநாடு ஒன்றிலே செய்கின்ற ஒழுக்கயீனமான நடத்தை, கவனிக்காது விடல், அல்லது இலங்கையை அவமானத்திற்கு உட்படுத்தும் செயலொன்று அல்லது தமது கடமை மற்றும் பொறுப்பை நிறைவேற்றத் தவறுதல் தொடர்பில் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர், அமைச்சின் செயலாளர் அல்லது பணிப்பாளர் நாயகம் நியமிக்கும் முறையான விசாரணைகள் குழுவொன்றின் மூலம் வழங்கப்படுகின்ற பரிந்துரைகளின் பிரகாரம் குறித்த வீரர்/வீரர்கள், வீராங்கனை/வீராங்கனைகள், முகாமையாளர்/முகாமையாளர்கள் அல்லது பிற அலுவலர் ஒருவர்/அலுவலர்களுக்கு எதிராக அல்லது விளையாட்டுச் சங்கத்திற்கு எதிராக தண்டனை ஒன்றினை, தடை ஒன்றினை அல்லது இடைநிறுத்தம் ஒன்றினை செய்ய முடியும்.

## பகுதி VI

### இடைக்கால ஏற்பாடுகள்

15. இந்த வர்த்தமானப் பத்திரிகை மூலம் இல்லாதாக்கப்பட்ட கட்டளைகளின் கீழ் 2025 ஆம் ஆண்டிற்கான அனைத்து பதவிகள் உட்பட நிறைவேற்றுக் குழு முறையான தேர்தல் செயற்பாடு ஒன்றின் மூலம் தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளது. எனினும், இந்த வர்த்தமானப் பத்திரிகை வெளியிடப்படும் தினமாகும் போது முறையான தேர்தல் செயற்பாடு ஒன்றின் ஊடாக அனைத்து பதவிகளும் உட்பட நிறைவேற்றுக் குழு தெரிவானது பூர்த்தி செய்யப்படாத சகல தேசிய விளையாட்டுச் சங்கமும்/சம்மேளனமும் இந்த வர்த்தமானி அறிவித்தலின் இதற்கு முன்னர் எவ்வாறு குறிப்பிடப்பட்ட போதிலும், இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படுகின்ற தினத்தில் இருந்து 90 நாட்கள் காலப் பகுதிக்குள் இந்த வர்த்தமானப் பத்திரிகையின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப தமது தேசிய சங்கத்தின் / சம்மேளனத்தின் அனைத்துப் பதவிகளும் அடங்கலாக நிறைவேற்றுக் குழுவானது முறையான தேர்தல் செயற்பாடு ஒன்றின் மூலம் தேர்ந்தெடுத்தல் வேண்டும். இந்த இடைக்கால ஏற்பாடுகளின் கீழ் நடாத்தப்படுகின்ற அனைத்து தேர்தல்களும் விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகத்தின் நேரடி கண்காணிப்பிற்கு உட்படுதல் வேண்டும்.

## பகுதி VII

### பொருள்கோடல்

16. இந்த ஒழுங்கு விதிகளில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய வாசகங்களுக்கு இடையே யாதேனுமொரு வித்தியாசம் ஏற்படும் பட்சத்தில், சிங்கள மொழி வாசகமே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

17. சொற்கள் தொடர்பான பிற அர்த்தம் தேவைப்பட்டாலன்றி இந்தக் கட்டளைகளில்

"வீரர்/வீராங்கனை" என்பதன் மூலம், சர்வதேச அல்லது தேசிய மட்டத்திலான விளையாட்டு ஒன்றிலே அல்லது யாதேனுமொரு விளையாட்டு நிகழ்ச்சி ஒன்றிலே பங்கேற்கும் நபர் ஒருவர் என பொருள்படும்.

"பந்தயம் கட்டுதல்" என்பதன் மூலம் மற்றும் அதற்காக பின்வருவனவும் உள்ளடக்கப்படும் ;

(அ) யாதேனுமொரு விளையாட்டில், போட்டியில் அல்லது நிகழ்ச்சியில் பெறுபேறு, அதனை நடாத்துதல் அல்லது அதில் வேறு யாதேனுமொரு நிகழ்ச்சி தொடர்பாக (தனித் தனியாக, குழுவாக அல்லது வேறு விதத்தில்) வேறு யாதேனுமொரு தரப்பினருடன் பந்தயம் கட்டுதல், வரவேற்றல், இடல் அல்லது வேறு விதத்தில் பந்தயம் கட்டுதல்.

(ஆ) யாதேனுமொரு போட்டியில் அல்லது நிகழ்ச்சியில் அல்லது விளையாட்டு ஒன்றின் பெறுபேறு, முன்னேற்றம், அதனை நடாத்துதல் அல்லது அதில் வேறு யாதேனுமொரு விடயம் பற்றிய பந்தயம் ஒன்றிற்கு வருவதற்காக வேறு யாதேனுமொரு தரப்பினரால் கோரிக்கை விடல், தூண்டுதல், விரும்ப வைத்தல், ஆலோசனை வழங்குதல், சாய்த்துக் கொள்ளல், ஊக்குவித்தல், வசதியளித்தல் அல்லது அதிகாரமளித்தல்.

(இ) வீரரின் அறிவின் படி யாதேனுமொரு நிகழ்வு பந்ததத்துடன் தொடர்புடையதாக இருத்தல் மற்றும் அதற்காக அவர் யாதேனுமொரு ஊக்குவிப்பினைப் பெறுவதற்கு எதிர்பார்க்கின்ற அல்லது பெற்றுக்கொண்டுள்ள யாதேனுமொரு சம்பவம் போட்டி ஒன்றின் போது அல்லது நிகழ்ச்சி ஒன்றின் போது அல்லது விளையாட்டு ஒன்றின் போது இடம்பெற்றதை உறுதிப்படுத்தல்.

"ஊழல்" என்பதன் மூலம், யாதேனுமொரு போட்டியின் அல்லது நிகழ்ச்சியின் பெறுபேறு, முன்னேற்றம் மற்றும் அதனை நடாத்துவது தொடர்பாக அல்லது அதன் வேறொரு பகுதி தொடர்பாக மோசமாக பாதிக்கும் விதத்தில் யாதேனுமொரு விதத்தில் திட்டமிடல் அல்லது உபாயங்களை தீட்டுதல் அல்லது அவ்வாறு முறைகேடான விதத்தில் பாதிக்கும் வகையில் யாதேனுமொரு விதத்தில் அல்லது வேறு விதத்தில் திட்டமிடல் அல்லது உபாயம் வகுத்தல் தரப்பினராக பொருள்படும்.

"ஊக்குப் பதார்த்தப் பாவனை" என்பதன் மூலம் 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க விளையாட்டுக்களில் ஈடுபடும் போது ஊக்குப் பதார்த்தங்களை பாவித்தலுக்கு எதிரான இணக்கப்பாடுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொருளே கருதப்படும்.

"தேசிய விளையாட்டு சங்கம்/சம்மேளனம்" என்பதன் மூலம், விளையாட்டுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொருளே கருதப்படும்.

"தேசிய விளையாட்டுக் கிண்ணம்/தேசிய விளையாட்டுப் போட்டித் தொடர்/தேசிய கிண்ணம்" என்பதன் மூலம், தேசிய விளையாட்டு சங்கம்/சம்மேளனம் ஒன்றின் ஊடாக ஏற்பாடு செய்யப்படுகின்ற தேசிய மட்டத்திலான போட்டித் தொடர் அல்லது விளையாட்டுப் போட்டியொன்று என பொருள்படும்.

"குற்றப் பத்திரம்" என்பதன் மூலம் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை சட்டத்தில் வரைவிலக்கனப்படுத்தப்பட்டுள்ள பொருளே கருதப்படும்.

"முறையான குழுவொன்று" என்பதன் மூலம் கருதப்படுவது, விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அவர்களின் அனுமதியுடன் விளையாட்டுத்துறை அமைச்சு அல்லது விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட குழுவொன்று என பொருள்படும். இவ்வாறான அனைத்துக் குழுக்களும் குறித்த விசாரணையின் விடயங்கள் தொடர்பாக விடய அறிவு மற்றும் சட்ட அறிவுள்ள நபர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

"விளையாட்டுக்கள் சட்டம்" என்பதன் மூலம் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் அல்லது அதில் யாதேனுமொரு திருத்தம் என பொருள்படும்.

"விளையாட்டுக்களுடன் தொடர்புடைய தவறுகளை தடுத்தல் சட்டம்" என்பதன் மூலம் 2019 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க சட்டம் என பொருள்படும்.

"நிதியாண்டு" என்பதன் மூலம் சனவரி 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்குரிய காலப் பகுதியினை கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

"தேசிய விளையாட்டுக்கள் தெரிவுக் குழு" என்பதன் மூலம் இலக்கம் 2298/84 மற்றும் 2022.09.24 ஆம் திகதிய உடைய வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தம் செய்யப்பட்ட 1974, செத்தெம்பர் 20 ஆம் திகதிய இலக்கம் 130 உடைய வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 1974 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி விளையாட்டுக்களில் பங்கேற்போரைக் கட்டுப்படுத்தும் கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய விளையாட்டுக்கள் தெரிவுக்குழு என பொருள்படும்.

*"தேசிய தெரிவுக் குழு" என்பதன் மூலம் சகல தேசிய விளையாட்டுக்கள் சங்கத்தினதும் சம்மேளனத்தினதும் சர்வதேச மட்டத்திலான போட்டிகளின் போது இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக செய்வதற்காக பங்கேற்பவர்கள் போட்டியாளர்களை தெரிவு செய்வதற்காக விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அனுமதியுடன் தேர்ந்தெடுக்க வேண்டிய தேசிய தெரிவுக் குழு என பொருள்படும்.*

*"பெராலிம்பிக் விளையாட்டுக்கள்" என்பதன் மூலம் சர்வதேச பெராலிம்பிக் குழுவினால் பெராலிம்பிக் ஒரு விளையாட்டாகப் பெயரிட்டுள்ள விளையாட்டுக்கள் என பொருள்படும்.*

*"பிரதேச விளையாட்டுக கழகங்கள்" என்பதன் மூலம் ஒரு பிரதேசத்தின் பிரதேச செயலாளர் பிரிவினுள் அந்த விளையாட்டுடன் தொடர்புடையாக நிறுவியுள்ள விளையாட்டுக் கழகங்கள் என பொருள்படும்.*

*"மாவட்ட விளையாட்டுக் கழகங்கள்" என்பதன் மூலம் அந்தந்த மாவட்டங்களினுள் அமைந்துள்ள, அனைத்து பிரதேசச் செயலகங்களும் உள்ளடக்கப்படும் வகையில் நிறுவியுள்ள பிரதேச விளையாட்டுக் கழகங்களின் தொகுப்பு என பொருள்படும். பிரதேச விளையாட்டுக் கழகங்களின் பொறுப்புக் கூறல் மாவட்ட விளையாட்டுக் கழகங்கள் மற்றும் மாகாண விளையாட்டுச் சங்கங்களுக்கு ஆக அமைய வேண்டியுள்ளதுடன், அவற்றினை ஒழுங்குபடுத்தும் பொறுப்பு தேசிய விளையாட்டுக்கள் சங்கத்திடம் ஒப்படைக்கப்படுகிறது.*

*"மாகாண விளையாட்டுக் கழகங்கள்" என்பதன் மூலம் அந்தந்த மாகாணத்தினுள் அமைந்துள்ள, அனைத்து மாவட்டங்களும் பிரதேசச் செயலகங்கள் உள்ளடக்கப்படும் வகையில், பிரதேச விளையாட்டுக் கழகங்களை நிறுவியுள்ள மாவட்ட விளையாட்டுச் சங்கங்களின் கூட்டுத்தொகை ஆகும். மாவட்டச் சங்கங்களின் பொறுப்புக் கூறல் மாகாண மற்றும் தேசிய விளையாட்டுச் சங்கங்களுக்கு ஆக அமைவதுடன், அவற்றினை ஒழுங்குபடுத்தும் பொறுப்பு தேசிய விளையாட்டுக்கள் சங்கத்திடம் ஒப்படைக்கப்படுகிறது.*

*"அமைச்சர்" என்பதன் மூலம் விளையாட்டுத்துறை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் என பொருள்படும்.*

*"அமைச்சரின் செயலாளர்" என்பதன் மூலம் விளையாட்டுத்துறை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் என பொருள்படும்.*

## பகுதி VIII

### கட்டளைகளை அகற்றுதல்

*18.* *விளையாட்டுக்கள் சட்டத்தின் பிரகாரம் விளையாட்டுத்துறை அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட கீழ்வரும் கட்டளைகளின் கீழ் சட்டபூர்வமாக மேற்கொள்ளப்பட்ட எந்த ஒன்றிற்கும் பாதிப்பு ஏற்படாதவாறு அந்தக் கட்டளைகள் இத்தால் அகற்றப்படுகின்றன.*

*2016 ஆம் ஆண்டின் ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய இலக்கம் 1990/23 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க தேசிய விளையாட்டுக்கள் சங்கங்கள் கட்டளை*

*2017 பெப்புருவரி 13 ஆம் திகதிய இலக்கம் 2006/13 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை*

*2017 மே 05 ஆம் திகதிய இலக்கம் 2017/41 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை*

*2018 செத்தெம்பர் 22 ஆம் திகதிய இலக்கம் 2089/56 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை*

*2018 ஒற்றோபர் 18 ஆம் திகதிய இலக்கம் 2093/39 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை*

*2019 சனவரி 10 ஆம் திகதிய இலக்கம் 2105/38 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை*

*2019 யூன் 18 ஆம் திகதிய இலக்கம் 2128/8 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை*

*2019 ஓகத்து 23 ஆம் திகதிய இலக்கம் 2137/86 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை*

*2020 மாச்சு 10 ஆம் திகதிய இலக்கம் 2166/9 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை*

2020 ஏப்பிறல் 30 ஆம் திகதிய இலக்கம் 2173/13 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

2020 மே 27 ஆம் திகதிய இலக்கம் 2177/8 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

2020 யூலை 31 ஆம் திகதிய இலக்கம் 2186/31உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

2020 செத்தெம்பர் 18 ஆம் திகதிய இலக்கம் 2193/55 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

2020 செத்தெம்பர் 21 ஆம் திகதிய இலக்கம் 2194/4 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

2020 செத்தெம்பர் 23 ஆம் திகதிய இலக்கம் 2194/54 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

2020 நவெம்பர் 19 ஆம் திகதிய இலக்கம் 2202/17 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

2020 திசெம்பர் 23 ஆம் திகதிய இலக்கம் 2207/7 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

2021 பெப்புருவரி 19 ஆம் திகதிய இலக்கம் 2215/47 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

2021 யூன் 01 ஆம் திகதிய இலக்கம் 2230/7 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

2022 மாச்சு 23 ஆம் திகதிய இலக்கம் 2272/40 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

2022 மே 26 ஆம் திகதிய இலக்கம் 2281/36 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

2022 மே 27 ஆம் திகதிய இலக்கம் 2281/37 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

2022 செத்தெம்பர் 08 ஆம் திகதிய இலக்கம் 2296/19 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

2022 செத்தெம்பர் 17 ஆம் திகதிய இலக்கம் 2297/94 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

2022 செத்தெம்பர் 22 ஆம் திகதிய இலக்கம் 2298/50 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

2022 நவெம்பர் 05 ஆம் திகதிய இலக்கம் 2304/88 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

2022 திசெம்பர் 14 ஆம் திகதிய இலக்கம் 2310/26 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

2022 திசெம்பர் 14 ஆம் திகதிய இலக்கம் 2310/28 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

2023 மே 08 ஆம் திகதிய இலக்கம் 2331/10 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

2023 மே 31 ஆம் திகதிய இலக்கம் 2334/22 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

2023 யூலை 28 ஆம் திகதிய இலக்கம் 2342/48 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

2023 ஓகத்து 09 ஆம் திகதிய இலக்கம் 2344/22 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

2023 ஓகத்து 17 ஆம் திகதிய இலக்கம் 2345/65 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

2023 செத்தெம்பர் 25 ஆம் திகதிய இலக்கம் 2351/07 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

2023 நவெம்பர் 05 ஆம் திகதிய இலக்கம் 2356/43 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

2024 சனவரி 13 ஆம் திகதிய இலக்கம் 2366/42 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

2024 சனவரி 24 ஆம் திகதிய இலக்கம் 2368/21 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

2024 மே 03 ஆம் திகதிய இலக்கம் 2382/32 உடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

19. இரத்துச் செய்த கட்டளைகளின் கீழ் பதிவு செய்துள்ள சகல தேசிய விளையாட்டுச் சங்கங்களும் இந்தக் கட்டளைகளின் கீழ் பதிவு செய்த தேசிய விளையாட்டுச் சங்கம் ஒன்றாக கருதுதல் வேண்டும்.

## I ஆவது அட்டவணை

**(2 ஆவது கட்டளை)**

**தேசிய விளையாட்டுச் சங்கம் / சம்மேளனம் ஒன்றினை பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம்**

1. தேசிய விளையாட்டுச் சங்கத்தின் / சம்மேளனத்தின் பெயர் : ........................................................................
.......................................................................................................................

2. முகவரி : ..............................................................................................................................................
............................................

3. தேசிய விளையாட்டுச் சங்கத்தினை / சம்மேளனத்தினை நிறுவிய திகதி : ..............................................
....................................................................................................................................................

4. விளையாட்டுக்கள் அல்லது விளையாட்டுத் தொகுதிகளின் பெயர்கள் : .....................................................
....................................................................................................................................................

5. பின்வரும் ஆவணங்கள் இந்த விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளன ;

(அ) இங்கு பகுதி II இல் குறிப்பாகக் குறிப்பிட்டுள்ள விடயங்களை உள்ளடக்கிய தேசிய விளையாட்டுச் சங்கத்தின் / சம்மேளனத்தின் யாப்பின் பிரதியொன்று : ஆம் / இல்லை

(ஆ) அந்த தேசிய விளையாட்டுச் சங்கத்தின் / சம்மேளனத்தின் பெயர், அலுவலக முகவரி, தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் உள்ளிட்ட தொடர்பாடலுக்கான தகவல்கள் : ஆம்/ இல்லை

(இ) அந்த தேசிய விளையாட்டுச் சங்கத்தின் / சம்மேளனத்தின் நடப்பு நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களின் பெயர், அலுவலக முகவரி, தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் உள்ளிட்ட தொடர்பாடலுக்கான தகவல்கள் : ஆம் / இல்லை

(ஈ) I அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள “உ” மாதிப் படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட முறையான கையொப்ப ஆவணமொன்றை உள்ளடக்கிய மேற்குறிப்பிட்ட நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுத்த ஆண்டுப் பொதுக் கூட்ட அறிக்கையின் தலைவர் மற்றும் செயலாளரினால் தமது கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ இலச்சினையை இட்டு உறுதிப்படுத்திய பிரதியொன்று: ஆம் / இல்லை

(உ) அந்த தேசிய விளையாட்டுச் சங்கத்தின் / சம்மேளனத்தின் கடந்த நிதியாண்டிற்குரிய கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களின் அந்த தேசிய விளையாட்டுச் சங்கத்தின் / சம்மேளனத்தின் தலைவர் மற்றும் செயலாளரினால் தமது கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ இலச்சினையை என்பவற்றினை இட்டு உறுதிப்படுத்திய பிரதியொன்று (இதற்குரிய நிதியாண்டு சனவரி 01 ஆம் திகதி ஆரம்பித்து திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஒருவருட காலப் பகுதியை கவனத்திற்கொள்ளல் வேண்டும்) : ஆம் / இல்லை

(ஊ) அந்தச் சங்கத்துடன் இணைந்த நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்களின் பெயர், அலுவலக முகவரி, தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் உள்ளிட்ட தொடர்பாடலுக்கான தகவல்கள் உள்ளிட்ட அந்த இணைந்த நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்களின் குழு உறுப்பினர்களின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் உள்ளிட்ட தொடர்பாடலுக்கான தகவல்கள் : ஆம் / இல்லை

(எ) அந்த தேசிய விளையாட்டுச் சங்கத்தினை / சம்மேளனத்தினை பதிவு செய்வதற்காக சமர்ப்பித்த சந்தர்ப்பத்தில் குறித்த தேசிய சங்கம் ஆகக் குறைந்தது 03 நிருவாக மாவட்டங்களில் இயற்கி வருவதாக உரிய மாவட்ட விளையாட்டு அலுவலர்களின் உறுதிப்படுத்தல் ஒன்றுடன் அந்த

தேசிய விளையாட்டுச் சங்கத்தின் / சம்மேளனத்தின் தலைவர் மற்றும் செயலாளரினால் சமர்ப்பிக்கப்படுகின்ற முறையான அறிக்கையொன்று : ஆம் / இல்லை

6. மேற்குறிப்பிட்ட குழுவின் நடப்பு அலுவலர்களை தேர்ந்தெடுத்துக்கொண்ட ஆண்டுப் பொதுக் கூட்டம் நடாத்திய திகதி : ..........................................................................................

பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிப்பதற்கு முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ..............................

தேசிய விளையாட்டுச் சங்கத்தின் / சம்மேளனத்தின் தலைவரின் கையொப்பம் மற்றும் பதவி இலச்சினை :

பெயர் மற்றும் முகவரி :

திகதி :

தேசிய விளையாட்டுச் சங்கத்தின் / சம்மேளனத்தின் செயலாளரின் கையொப்பம் மற்றும் பதவி இலச்சினை :

பெயர் மற்றும் முகவரி :

திகதி :

**(2 ஆவது கட்டளை)**

**“ஆ” மாதிரிப் படிவம்**

**தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/ சம்மேளனத்தின் பதிவு பற்றிய சான்றிதழ்**

தேசிய விளையாட்டுச் சங்கத்தின் / சம்மேளனத்தின் பெயர் : ................................................................................ ..................................................................................20 ........................ மாதம் ........................ ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ........................ (வினையாட்டின் பெயர்) பற்றிய தேசிய விளையாட்டுச் சங்கம்/ சம்மேளனம் ஆக 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 29 ஆவது பிரிவின் கீழ் ........................ பதிவுசெய்துகொண்டுள்ளதாக இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். சங்கத்திற்கு வழங்கப்பட்ட பதிவிலக்கம் ......... ........................................ ஆகும்.

...............................................
விளையாட்டுக்கள் பணிப்பாளர் நாயகம்

திகதி : ........................

**(2 ஆவது கட்டளை)**

**“இ” மாதிரிப் படிவம்**

**பதிவு செய்த தேசிய விளையாட்டுச் சங்கத்தின்/ சம்மேளனத்தின் ஆவணம்**

1. விளையாட்டுக்களின் அல்லது விளையாட்டுத் தொகுதிகளின் பெயர் : .....................................
2. விளையாட்டுக்கள் சட்டத்தின் 28 ஆவது பிரிவின் கீழ் உத்தரவு பற்றிய விபரம் : .............
   (1) வர்த்தமானப் பத்திரிகையின் திகதி/இலக்கம் : ..........................................
   (2) விளையாட்டுத்துறை அமைச்சின் / விளையாட்டுக்கள் அபிவிருத்தித் திணைக்களத்தின் கோப்பு இலக்கம் : ......... ............................
3. தேசிய விளையாட்டுச் சங்கம் ஒன்றாக முதலாவது பதிவுத் திகதி : .....................................
4. சங்கத்தின் மற்றும் பதவி வகிப்போரின் முகவரிகள் மற்றும் தொடர்பாடலுக்கான தகவல்கள் : .....................................
5. பதிவினை முற்கூட்டியே இரத்துச் செய்தல் / இடைநிறுத்தம் செய்யப்பட்டிருப்பின் இரத்துச் செய்த / இடைநிறுத்தம் செய்த திகதி : .....................................
6. இடைக்கால குழு (இருப்பின் பெயர்கள் மற்றும் கால எல்லைகள்) : .....................................
7. ஆண்டுப் பொதுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டனவா? ஆம் / இல்லை / திகதி : ................

8. வருடாந்தக் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்யப்பட்டது. ஆம் / இல்லை / திகதி : .....................................

9. யாப்பு பணிப்பாளர் நாயகத்தினால் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆம் / இல்லை / திகதி : ..........

10. நடாத்திய தேசிய விளையாட்டுப் போட்டிகள் : .....................................

**"ஈ" மாதிரிப் படிவம்**

**பிரிவு அ**

**தேசிய விளையாட்டுச் சங்கங்களுக்கு/ சம்மேளனங்களுக்கு நேரடியாக இணைப்புச் செய்யப்பட்டுள்ள அங்கத்துவர்கள் ஆவணம்**

1. தேசிய விளையாட்டுச் சங்கத்தின் / சம்மேளனத்தின் பெயர் : .....................................
2. இணைந்த நிறுவனத்தின் பெயர் : .....................................
3. முகவரி : .....................................
4. அங்கத்தவர்களின் எண்ணிக்கை : .....................................
5. ஆண்டுப் பொதுக் கூட்டங்களில் பங்கேற்பதற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ள பிரதிநிதிகளின் எண்ணிக்கை : ..................
6. ஆண்டுப் பொதுக் கூட்டங்களில் அங்கத்தவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள வாக்குகளின் எண்ணிக்கை : .................
7. அங்கத்தவர்களின் பெயர்கள் : .....................................
8. அலுவலர்களின் பெயர்கள், பதவிகள் மற்றும் முகவரிகள் : .....................................
9. குழு உறுப்பினர்களின் பெயர் மற்றும் முகவரி : .....................................

**பிரிவு ஆ**

**மாகாண சங்கங்கள், மாவட்டச் சங்கங்கள், இணைந்த சங்கங்கள், லீக் அல்லது தேசிய விளையாட்டுச் சங்கங்களுடன்/ சம்மேளனங்களுடன் இணைந்த வேறு யாதேனும் அமைப்புக்களின் அங்கத்தவர்களது ஆவணம்**

1. மாகாண சங்கத்தின், மாவட்டச் சங்கத்தின் இணைந்த சங்கத்தின் லீக் அல்லது வேறு யாதேனுமொரு அமைப்பின் பெயர் : ......................................
2. முகவரி : .....................................
3. இணைந்த நிறுவனங்கள் : .....................................
4. முகவரி : .....................................
5. அங்கத்தவர்களின் எண்ணிக்கை : .....................................
6. அலுவலர்களின் பெயர்கள், பதவிகள் மற்றும் முகவரிகள் : .....................................
7. குழு உறுப்பினர்களின் பெயர் மற்றும் முகவரி : .....................................

**(2 ஆவது கட்டளை)**

**மாதிரிப் படிவம் "உ"**

| பெயர் | பிரதிநிதித்துவம் செய்கின்ற இணைந்த விளையாட்டுச் சங்கம் அல்லது நிறுவனம் | பதவி | ஒப்பம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

தேசிய விளையாட்டுக்கள் சங்கத்தின் /சம்மேளனத்தின் தலைவரின் கையொப்பம் மற்றும் பதவி இலச்சினை :

தேசிய விளையாட்டுச் சங்கத்தின் /சம்மேளனத்தின் செயலாளரின் கையொப்பம் மற்றும் பதவி இலச்சினை :

திகதி :

## அட்டவணை II

### விளையாட்டுக்களின் பெயர்கள்

1. பெட்மிண்டன் (Badminton)
2. நீர் விளையாட்டுக்கள் (Aquatic Sports)
3. உடற்கட்டமைப்பு (Body Building)
4. சைக்கிள் ஓட்டுதல் (Cycling)
5. ரைபிள் (Rifle)
6. ஹொக்கி (Hockey)
7. கராத்தே டோ (Karate Do)
8. படகு ஓட்டுதல் (Yachting)
9. ரக்பி (Rugby)
10. பளு தூக்குதல் (Weightlifting)
11. ஜிம்னாஸ்டிக்ஸ் (Gymnastic)
12. கோல்ஃப் (Golf)
13. மல்யுத்தம் (Wrestling)
14. ஆட்டோமொபைல் விளையாட்டுக்கள் (Automobile Sports)
15. கூடைப்பந்து (Basket Ball)
16. தடகளம் (Athletics)
17. கிரிக்கெட் (Cricket)
18. வலைப்பந்து (Netball)
19. டென்னிஸ் (Tennis)
20. பிரீஜ் (Bridge]
21. கெரம் (Carrom)
22. உயிர் காப்பு (Life Saving)
23. குத்துச்சண்டை (Boxing)
24. ஜூடோ (Judo)
25. பில்லியர்ட்ஸ் மற்றும் ஸ்னூக்கர் (Billiards & Snooker)
26. கால்பந்து (Football)
27. கரப்பந்து (Volleyball)
28. எல்லே (Elle)
29. சதுரங்கம் (Chess)
30. படகோட்டுதல் (Rowing)
31. மேசைப்பந்து (Table Tennis)
32. ஸ்குவாஷ் (Squash)
33. டைக்வாண்டோ (Taekwondo)
34. மென்பந்து கிரிக்கெட் (Softball Cricket)
35. பவர் லிஃப்டிங் (Powerlifting)
36. கபடி (Kabaddi)
37. மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுக்கள் (Sports for the Disabled) (Paralympics)
38. மோட்டார் சைக்கிள் விளையாட்டுக்கள் (Motor Cycle Sports)
39. பேஸ்போல் (Baseball)
40. வுஷூ (Wushu)
41. பந்து எறிதல் (Throw ball)
42. ஈட்டி எறிதல் (Archery)
43. குதிரை ஓட்டம் (Equestrian)
44. பாரம்பரிய கராத்தே (Traditional Karate)
45. கைப்பந்து (Handball)
46. கயிறு இழுத்தல் (Tug of War)
47. சுடுதல் (Shooting)
48. வாள்வீச்சு (Fencing)
49. உருளை சறுக்கு (Roller Skating)
50. செபக் டக்ரா (Sepak Takrow)
51. சுமோ (Sumo)
52. நவீன பென்டத்லான் (Modern Pentathlon)
53. ஜூஜிட்சு (Ju Jitsu]
54. சாம்போ (Sambo)
55. கோ-கோ (Kho-Kho)
56. அங்கம்பொர (Angampora)
57. கூடோ (Kudo)
58. போல்ரூம் நடனம் (Ballroom Dancing)
59. ரோல் போல் (Roll Ball)
60. மலையேறுதல் (Climbing and Mountaineering)
61. படகு சவாரி மற்றும் கயாக்கிங் (Canoeing and Kayaking)
62. ஸ்கிராப்பிள் (Scrabble)
63. முய் தாய் (Muay Thai)
64. யுனிஃபைட் (Unifight)
65. விசைப் படகு (Powerboat)
66. சர்ஃபிங் (Surfing)
67. பந்து பூப்பந்து (Ball Badminton)
68. பிரெஞ்சு சாவேட் (French Savate)
69. லோன் போல் (Lawn Bowl)
70. மின் விளையாட்டுக்கள் (eSports)
71. டெக்போல் (Teqball)
72. ஜீத் குன் - டோ (Jeet Kune – Do)
73. கோர்ஃப்போல் (Korfball)
74. செஸ்டோபோல் (Cestoball)

EOG 05 - 0119

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.